4. இப்பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். இச்சட்டதிட்டத்தினை மீறும் சந்தர்ப்பத்தில் ஒழுக்காற்று அதிகாரியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

5. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு இணையத்தின் ஊடாக நிகழ்நிலை முறையில் Online இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இனுள் பிரவேசிப்பதன் மூலம் மட்டுமே நிகழ்த்த முடியும். இணையத்தளத்தின் பிரதான முகப் பக்கத்தில் வலது பக்கமுள்ள பட்டியலில் "Apply Online" என்னும் பகுதிக்குப் பிரவேசித்து தமக்குரிய பரீட்சையினைத் தெரிவுசெய்வதன் மூலம் விண்ணப்பப்பத்திரத்தினை நிரப்பிக்கொள்ள முடியும்.

பரீட்சை விண்ணப்பப்பத்திரத்தினை நிரப்புவதற்கு 2016.09.09 ஆந் திகதி மு. ப. 8.00 தொடக்கம் 2016.09.23 ஆந் திகதி இரவு 12.00 வரையான காலப்பகுதியினுள் மட்டுமே பூரணப்படுத்த முடியும்.

6. **பரீட்சைக் கட்டணங்கள்.**- முதல் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் எந்தவித பரீட்சைக் கட்டணங்களையும் செலுத்த வேண்டியதில்லை. இதற்கு முன்னர் பரீட்சார்த்தி ஒருவர் விண்ணப்பத்தினை மேற்கொண்டு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அனுமதி ஒன்று வழங்கிய பின்னருங்கூட அப்பரீட்சைக்குத் தோற்றியிராத அத்தகை நிலைமைகளில் அதனைப் பரீட்சைக்குத் தோற்றியதாக கருத்திற்கொள்ள வேண்டும்.

இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றிய அலுவலர்கள் பின்வரும் விதத்தில் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

சகல சேவைகளிலுமுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் ஒரு பாடத்தினைவிட மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் 1,000 ரூபாவினை பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் 500 ரூபாவினை பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்.

"SLIDA" கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு நாடு முழுவதிலுமுள்ள ஏதேனுமொரு அஞ்சல் அலுவலகத்தின் மூலம் (உப அஞ்சல் அலுவலகங்கள் நீங்கலாக) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் இலக்கம் விண்ணபத்தின் உரிய கூட்டில் குறிப்பிடப்படல் வேண்டும். "SLIDA" கணக்கிற்கு பணத்தினைச் செலுத்துவதற்காக உள்நாட்டுத் தந்திக் காசுக் கட்டளை விண்ணபத்தினை (மாதிரி 85) நிரப்பும்போது "SLIDA" என்பது பெறுநராகக் குறிப்பிடப்பட வேண்டும். அதேவேளை உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரானது பெறுநரின் முகவரிக்கான இடத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். (பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டவாறு குறியீட்டுப் பெயர்கள் அமைதல் வேண்டும்.)

மேலும் கணக்கிற்கு பணத்தினை வரவு வைக்கும்போது அனுப்புவராக விண்ணப்பதாரியின் பெயரினையும் அனுப்புபவரின் முகவரிக்கான இடத்தில் விண்ணப்பதாரியின் தே. அ. அ. (NIC) இலக்கத்தையும் உள்ளடக்கி விண்ணப்பமானது நிரப்பப்படுதல் வேண்டும்.

7. இலங்கை நிர்வாக சேவை, இலங்கைப் பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கைக் கட்டிடக் கலைஞர் சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையின் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான பரீட்சை அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளுதல்.

இணையத்தில் நிகழ்நிலையில் (Online) நிரப்பப்பட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும்போது பரீட்சார்த்திகளுக்கு உறுதிப்படுத்தல் இலக்கம் (Confirmation Number) ஒன்று வழங்கப்படும் என்பதுடன் பரீட்சார்த்தி பின்னர் எழும் விசாரணைகளுக்காக அதனை வைத்திருத்தல் வேண்டும். உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பமானது இணையத்தின் நிகழ்நிலை முறையினூடாக (Online) அனுப்பப்பட்டவுடன் பரீட்சார்த்திகள் அணுகுவழியினைக் கொண்டிருக்கும் இணையப் பக்கத்தில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் அவர்கள் தமது பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். பரீட்சார்த்தி அனுமதி அட்டையின் அச்சிடப்பட்ட பிரதி ஒன்றினைப் பெறல் வேண்டும் என்பதுடன் உரிய திணைக்களத் தலைவரினால் அல்லது அந்த நோக்கத்திற்காக தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதி அலுவலரினால் தனது கையொப்பத்தினைச் சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்விதத்தில் சான்றுறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்திய அனுமதி அட்டையின் பிரதியொன்றை பரீட்சார்த்தியின் பிரத்தியேகக் கோவையில் இணைத்துக்கொள்ளும் நோக்கத்திற்காக திணைக்களத் தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு**.- இணையத்தின் நிகழ்நிலையினூடாக (Online) விண்ணப்பத்தினை நிரப்பும்போது தனிப்பட்ட முகவரி, பணியாற்றும் நிறுவனம் மற்றும் அலுவலக முகவரி என்பன தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும்.

8. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான செய்முறை தொடர்பிலான ஏதேனும் தெளிவூட்டல் தேவைப்படின் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு 2016.09.09 ஆந் திகதி முதல் 2016.09.23 ஆந் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு. ப. 8.30 மணியிலிருந்து பி. ப. 4.15 மணிவரை இந்த இணைப்பின் ஊடாக தொடர்பாடல் மேற்கொள்ளப்பட முடியும்.

9. அனுமதி அட்டைகளைக் கொண்டிருக்கும் அலுவலர்களுக்கு அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவாக கடமை விடுமுறையினை திணைக்களத் தலைவர் வழங்குதல் வேண்டும். அவர்களின் பரீட்சார்த்தித் தன்மையினை உறுதிப்படுத்த வேண்டுமாயின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இதனைச் செய்துகொள்ள முடியும். பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பரீட்சார்த்திகளுக்கு போக்குவரத்துச் செலவினங்கள் வழங்கப்பட மாட்டாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை பரீட்சை மேற்பார்வையாளரிடம் முன்வைத்தல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

மேற்படி ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

*11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் பரீட்சார்த்தியொருவர் தனக்கு உரித்துடையதற்ற மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாக தெரியவருமாயின் அத்தகைய விண்ணப்பதாரியின் பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு பரீட்சார்த்தி அனுமதிக்கப்பட மாட்டார்.*

*12. **பரீட்சைத் திட்டம்.**- ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான பாடங்கள் மற்றும் பாடவிதானங்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாத்தாளுக்குமான காலப்பகுதி மூன்று (3) மணித்தியாலங்களாகும். வினைத்திறன்காண் தடைப்பரீட்சையினைச் சித்தியெய்துவதற்கு பரீட்சார்த்தி ஒருவர் ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தது நாற்பது (40) புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் :-*

*12.1 இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (2013.12.23 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பின் பின் இணைப்பு "உ") :*

*முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-*

| தொடர் இலக்கம் | பாடம் | | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|---|
| 1 | சட்டம் | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 01-I |
| | | இலங்கையின் சட்டமுறைகள் | 3 மணித்தியாலங்கள் | 01-II |
| | | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 01-III |
| 2 | நிர்வாகம் | | 3 மணித்தியாலங்கள் | 02-I |
| 3 | பொருளியல் மற்றும் சமூகவியல் | | 3 மணித்தியாலங்கள் | 03 |
| 4 | அரச துறையில் நிதி முகாமைத்துவம் மற்றும் பெறுகை நடைமுறை | | 3 மணித்தியாலங்கள் | 04 |

*12.1.1 சட்டம் (100 புள்ளிகள்).- பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட மூன்று வினாப் பத்திரங்கள் :*

*முதலாவது (I) வினாப்பத்திரம் - அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் (பாட இலக்கம் 01-1) :*

(i) வரலாற்று ரீதியிலான அபிவிருத்தி உள்ளடங்கலாக இலங்கை அரசியலமைப்பின் கட்டமைப்பு மற்றும் 1978 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பு
(ii) நிறைவேற்றுத்துறை, குடியரசின் சனாதிபதி, பிரதம மந்திரி, அமைச்சரவை மற்றும் அரசாங்க சேவை
(iii) நீதியை நிலைநாட்டுதல்
(iv) நிர்வாகத்துடன் மீதான நீதித்துறைக் கட்டுப்பாடு
(v) அரசாங்க கொள்கைகளுக்கான வழிகாட்டல் கோட்பாடுகள் மற்றும் அடிப்படைக் கடமைகள்
(vi) பேராண்மைச் சட்டம்
(vii) அரசினதும் அரச அதிகார சபைகளினதும் பொறுப்புக்கள்
(viii) அடிப்படை உரிமைகள்

*இரண்டாவது (II) வினாப்பத்திரம் - இலங்கையில் சட்ட முறைகள் (பாட இலக்கம் 01-11) :*

(i) நீதியை நிலைநாட்டுதல்
(ii) இலங்கையின் சட்ட வரலாறு
(iii) நீதிமன்ற அமைப்பு

(iv) இலங்கை நீதிமன்ற கட்டளைச் சட்டம் (6 ஆவது அத்தியாயம்)
(v) 1971 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கத்தினைக் கொண்ட நீதி நிலைநாட்டச் சட்டம்

*மூன்றாவது* (III) *வினாப்பத்திரம் - குற்றவியல் சட்டமும் சான்றுச் சட்டமும் (பாட இலக்கம்* III*)* :

(i) தண்டனைச் சட்டக்கோவை
(ii) சான்றுக் கட்டளைச் சட்டம்

பரீட்சார்த்தியொருவர் சட்டம் என்ற பாடத்தினைச் சித்தியெய்துவதற்கு சகல வினாப்பத்திரங்களிலும் ஆகக்குறைந்தது 35% புள்ளிகள் மற்றும் மொத்தப் புள்ளிகளில் சராசரியாக 40% இனையும் பெறுதல் வேண்டும்.

*12.1.2 நிர்வாகம் (பாட இலக்கம் 02 -* I*) - (100 புள்ளிகள்).- பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :*

(i) அலுவலக, வெளிக்கள நடவடிக்கைகளை ஒருங்கமைத்தல் மற்றும் அமைப்பாண்மை முறைகள்.

(ii) தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாங்கள் :

I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII (அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்)

*12.1.3 பொருளியல் மற்றும் சமூகவியல் (பாட இலக்கம் 3) - (100 புள்ளிகள்).-* இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளை உள்ளடக்கும். முதலாவது பகுதி (I) வினாப்பத்திரம் - பொருளியல்

(i) பெறுமதி, உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தல் கொள்கைகளின்பால் விசேட அவதானத்துடனான பொருளியல் கோட்பாடுகள் ;
(ii) பணம், உற்பத்தி மற்றும் விநியோகம் ;
(iii) இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பு தொடர்பான அவதானம் மற்றும் இலங்கையின் பொருளாதாரப் பின்னணி மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் ;

இரண்டாவது பகுதி (II) சமூகவியல் :

(i) சமூக கட்டமைப்பின் அமைப்பாண்மையும் பணிகளும் ;
(ii) மானிட உறவுகளும் குழுக்களும் ;
(iii) உறவு முறை, திருமணம் மற்றும் குடும்பம் ;
(iv) கிராமிய மற்றும் நகர்ப்புறச் சமூகம் ;
(v) சமூக நிலைகளும் ஏற்றத்தாழ்வுகளும் ;
(vi) சமூக கட்டுப்பாடு ;
(vii) கலாசாரம், சமயம், ஒழுக்கம் மற்றும் விழுமியங்கள் ;

பொருளியல் மற்றும் சமூகவியல் பாடத்தினைச் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு பகுதிக்கும் ஆகக்குறைந்தது இருபது (20) புள்ளிகளைப் பரீட்சார்த்தி ஒருவர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

*12.1.4 அரச துறையில் நிதி முகாமைத்துவம் மற்றும் பெறுகை நடைமுறை - (பாட இலக்கம் 04) - (100 புள்ளிகள்).-* பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :-

(i) இலங்கையில் நிதிக் கட்டுப்பாடு-

* அரச நிதி முகாமைத்துவம் தொடர்புபட்ட அரசியலமைப்பு ஏற்பாடுகள் ;
* அரச நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு ;
* நிதியம் என்பதன் கருத்து ;
* திரட்டு நிதியமும் அதன் தொழிற்பாடும் ;
* ஒதுக்கீட்டின் குறிக்கோளும் முறைகளும் ;

* எதிர்பாராச் செலவு நிதியம் ;
* ஏனைய நிதியங்களும் அவற்றின் தொழிற்பாடும் ;
* அரசிறை ;
* நிதி அமைச்சரின் அதிகாரங்களும் வகிபங்குகளும் ;
* திறைசேரியின் அதிகாரங்களும், வகிபங்குகளும் ;
* ஆணைச்சீட்டுக்கள் மற்றும் கட்டுநிதி அதிகாரம் ;
* கணக்காய்வாளர் நாயகமும் அவற்றின் அதிகாரங்களும் வகிபங்குகளும் ;
* அரச கணக்குக் குழு (COPA) ;
* அரச தொழில் முயற்சிக்குழு (COPE)

(ii) கணக்கீட்டு அலுவலர்கள், தலைமைக் கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் அரசாங்க வருமானக் கணக்கீட்டு அலுவலர்களின் நியமனங்கள், அதிகாரங்கள் மற்றும் வகிபங்குகள்/பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் தன்மை

(iii) உள்ளகக் கணக்காய்வு

(iv) அரசாங்க செலவினங்களைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம்-

* அமைப்புக்களின் நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகளை இனங்காணுதல்
* அரசாங்கக் கொள்கைகள், குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணுதல்
* அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடலும் மதிப்பிடுதலும், மற்றும் அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்தலும்
* வருடாந்த வருமானம் மற்றும் செலவுகளின் மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் இறுதித் தீர்மானம் எடுத்தல்

(v) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றங்களை மேற்கொள்ளல்-

* வீரமன் நடைமுறையினை அமுல்படுத்துதல்
* அரச துறையின் பதவியணி மற்றும் சம்பள முகாமைத்துவம்
* மொத்தச் செலவு மதிப்பீடுகள் மற்றும் அவற்றினை திருத்தியமைத்தல்
* குறைநிரப்பு மதிப்பீடுகள்

(vi) அரச உடைமைகளின் நட்டங்களும் உரிமைக் கைவிடல்களும்

(vii) நானாவித கணக்கீட்டு விடயங்கள்

(viii) நிதி முகாமைத்துவத்திற்கான தொழிற்பாடுகளைக் கையளித்தல்

(ix) அரச நிதியின் கட்டுக்காப்பும் வங்கிக் கணக்குகளின் நடைமுறையும்

(x) அரசாங்க பெறுகைச் செயன்முறை-

* அரசாங்கப் பெறுகை நடைமுறைக் கோவை
* அரசாங்கப் பெறுகை வழிகாட்டல் கோவை

12.2 இலங்கைப் பொறியியல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை (2013.11.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைப் பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை "iii")

முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் பாடங்கள் கீழ்வருமாறு :

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1 | நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 02-II |
| 2 | நிதி முறைமைகள் | 3 மணித்தியாலங்கள் | 05-I |
| 3 | திணைக்கள/தாபன முறைமைகள் | இப்பரீட்சை நிறுவனத் தலைவரினால் நடாத்தப்படுவதனால் இது குறித்த விபரங்கள் இவ்வறிவித்தலில் பிரசுரிக்கப்படவில்லை. | |

ஒவ்வொரு பாடத்தினையும் சித்தியெய்துவதற்கு குறைந்தது நாற்பது (40) புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.2.1 *நிர்வாகம் - (பாட இலக்கம் 02-II) (100 புள்ளிகள்).-* 1985 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தாபன விதிக்கோவையின் தொகுதி I மற்றும் 1999 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தாபன விதிக்கோவையின் தொகுதி II இலுள்ள சகல அத்தியாயங்களும் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் (உரிய காலத் திருத்தங்களுக்கு உட்பட்டு) என்பவற்றின் அடிப்படையில் பொறியியல் சேவைத் தொழிற்பாடுகள் தொடர்பில் தயாரிக்கப்படும் ஒரு வினாப்பத்திரம்.

12.2.2 *நிதி முறைகள் -* (பாட இலக்கம் 05-I - 100 புள்ளிகள்).- அத்தியாயம் IX மற்றும் X தவிர 1992 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நிதிப் பிரமாணங்களிலுள்ள சகல அத்தியாயங்களும் மற்றும் தேசிய பெறுகை வழிகாட்டலுக்கான தகுதிவிதிகள் (உரிய காலத் திருத்தங்களுக்கு உட்பட்டு) என்பவற்றின் அடிப்படையில் பொறியியல் சேவைத் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் தயாரிக்கப்படும் ஒரு வினாப்பத்திரம்.

12.3 இலங்கை விஞ்ஞான சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை (2014.08.28 ஆந் திகதிய 1877/ 27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை விஞ்ஞான சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 4) மற்றும்

இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை (2014.08.28 ஆந் திகதிய 1877/ 28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கட்டிடக் கலைஞர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 4).

இப்பரீட்சைகளுக்கான பாடங்கள் பின்வருமாறு காணப்படுகின்றது :

| *பாடம்* | *காலம்* | *பாட இலக்கம்* |
|---|---|---|
| நிதி முறைமைகள் | 3 மணித்தியாலங்கள் | 05-II |
| நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 02-III |
| திணைக்கள ஒழுங்குவிதிகள் | இப்பரீட்சை நிறுவனத் தலைவரினால் நடாத்தப்படுவதனால் இது குறித்த விபரங்கள் இவ்வறிவித்தலில் பிரசுரிக்கப்படவில்லை. | |

12.3.1 *நிதி முறைமைகள்.- (பாட இலக்கம் 05-II- 100 புள்ளிகள்).-* பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :-

(i) இலங்கையில் நிதிக் கட்டுப்பாடு-

* அரச நிதி முகாமைத்துவம் தொடர்புபட்ட அரசியலமைப்பு ஏற்பாடுகள்
* அரச நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு
* நிதியம் என்பதன் கருத்து
* திரட்டு நிதியமும் அதன் தொழிற்பாடும்
* ஒதுக்கீட்டின் குறிக்கோளும் முறைகளும்
* எதிர்பாராச் செலவு நிதியம்
* ஏனைய நிதியங்களும் அவற்றின் தொழிற்பாடும்
* அரசிறை
* நிதி அமைச்சரின் அதிகாரங்களும் வகிபங்குகளும்
* திறைசேரியின் அதிகாரங்களும், வகிபங்குகளும்
* ஆணைச்சீட்டுக்கள் மற்றும் கட்டுநிதி அதிகாரம்
* கணக்காய்வாளர் நாயகமும் அவரின் அதிகாரங்களும் வகிபங்குகளும்
* அரச கணக்குக் குழு (COPA)
* அரச தொழில் முயற்சிக்குழு (COPE)

(ii) கணக்கீட்டு அலுவலர்கள், பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் அரசாங்க வருமானக் கணக்கீட்டு அலுவலர்களின் நியமனங்கள், அவ் அலுவலர்களின் அதிகாரங்கள் மற்றும் வகிபங்குகள்/பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் தன்மை.

(iii) உள்ளகக் கணக்காய்வு

(iv) அரசாங்க செலவினங்களைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்-

* அமைப்புக்களின் நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகளை இனங்காணுதல்
* அரசாங்கக் கொள்கைகள், குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணுதல்
* அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடலும் மதிப்பிடுதலும், மற்றும் அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்தலும்
* வருடாந்த வருமானம் மற்றும் செலவுகளின் மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் இறுதித் தீர்மானம் எடுத்தல்

(v) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றங்களை மேற்கொள்ளல்-

* வீரமன் நடைமுறையினை அமுல்படுத்துதல்
* அரச துறையின் பதவியணி மற்றும் சம்பள முகாமைத்துவம்
* மொத்தச் செலவு மதிப்பீடுகளும் திருத்தங்களும்
* குறைநிரப்பு மதிப்பீடுகள்

(vi) அரச உடைமைகளின் நட்டங்களும் உரிமைக் கைவிடல்களும்

(vii) நானாவித கணக்கீட்டு விடயங்கள்

(viii) நிதி முகாமைத்துவத்திற்கான தொழிற்பாடுகளைக் கையளித்தல்

(ix) அரச நிதியின் கட்டுக்காப்பும் வங்கிக் கணக்குகளின் நடைமுறையும்

(x) அரசாங்க பெறுகைச் செயன்முறை-

* அரசாங்கப் பெறுகை நடைமுறைக் கோவை
* அரசாங்கப் பெறுகை வழிகாட்டல் கோவை

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.3.2 *நிர்வாகம்.- (பாட இலக்கம் 02-III - 100 புள்ளிகள்).-* பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :-

(i) தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள்-

I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII,

(ii) 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.4 இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இனையுடைய அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை (2010.09.10 ஆந் திகதிய 1670/ 33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 3 ஆவது பின்னிணைப்பு)

முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான பாடங்கள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது :

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1. | அரச நிதி நடைமுறைகள் | 3 மணித்தியாலங்கள் | 06 |
| 2. | சட்டம் மற்றும் முகாமைத்துவம் | 3 மணித்தியாலங்கள் | 07 |
| 3. | நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 02-IV |
| 4. | அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல்களை முன்வைத்தல் | 3 மணித்தியாலங்கள் | 08 |

12.4.1 அரச நிதிச் செயற்பாட்டு நடைமுறைகள் (பாட இலக்கம் 6) (100 புள்ளிகள்).- அரசாங்க கொடுக்கல் வாங்கல் தொடர்பான நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் திறைசேரியின் சுற்றறிக்கையினைப் பயன்படுத்துதல், அரச வருமானத் தொடர்பிற்கு ஏற்ப நிதி ஒழுங்குவிதி/ செயற்பாட்டு ஒழுங்கு, செலவீனம், வெளிநாட்டு நன்கொடைகள், வருடாந்த மற்றும் மேலதிக மதிப்பீடு, அரச கடன், கேள்விமனு வழங்கல், கட்டுநிதி மற்றும் முற்பணங்கள் நாட்டின் கணக்கு, அரச கணக்கு, நடைமுறை சார்ந்த மற்றும் பொருளாதார வகைப்படுத்தல்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிறன் வாய்ந்த பாதீடு, நிதி அமைச்சரின் பணிகள், திறைசேரி, நிதி அமைச்சு, செயலாளர்கள், கணக்காய்வாளர் நாயகம் மற்றும் அரச கணக்குக் குழு தொடர்பான அரச நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் திறைசேரியின் சுற்றறிக்கை பயன்படுத்தப்படும் முறைமை தொடர்பாக விண்ணப்பதாரிகளின் அறிவினைப் பரீட்சித்துப் பார்த்தல்.

12.4.2 சட்டம் மற்றும் முகாமைத்துவம் (பாட இலக்கம் - 07) (100 புள்ளிகள்)

சட்டம் : சட்டம் என்பதன் கருத்து-

இலங்கையின் சட்ட முறைமை
இலங்கையின் நீதிமன்ற முறைமை
ஒப்பந்தச் சட்டம்
முகவர் நிலையச் சட்டம்
பொருட்களை விற்றல்
தவணைக் கட்டண முறையில் செலுத்துவதற்கு விலைக்கு வாங்குதல்
கொடுக்கல் வாங்கல் நிகழ்த்த முடியுமான முறிகள்
பிணையினை சான்றுப்படுத்திக்கொள்ளல்
காப்புறுதி

முகாமைத்துவம் :

முகாமைத்துவம் பற்றிய அறிமுகம்
முகாமையாளர்களின் பணிகள் மற்றும் திறமைகள்
திட்டமிடல் செயற்பாடு மற்றும் அமைப்பு நிலைகளை உருவாக்கல்
அமைப்புக் கட்டமைப்பு
மனித வள முகாமைத்துவம்
செயலாற்றுகை மதிப்பீடு
ஊக்குவிப்பு
உள்நோக்கம்
தலைமைத்துவம்
தொடர்பாடல்
தீர்மானம் எடுத்தல்
பிரச்சினைகளைத் தீர்த்தல்
மாறுபட்ட முகாமைத்துவம்
முகாமைத்துவ முரண்பாடுகள்
முகாமைத்துவக் காலம்
தரச் சுழற்சி, உற்பத்தி மற்றும் விளைவு
முகாமைத்துவ நெறிமுறைகள் மற்றும் பொறுப்புக்கள்

12.4.3 நிர்வாகம் (பாட இலக்கம் 2-IV - 100 புள்ளிகள்) :

(ii) தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் :

VII, IX, XI, XII, XV, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதியின் முதலாவது வகுதியின் I தொடக்கம் VI வரையான அத்தியாயங்கள்

12.4.4 அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல்களை முன்வைத்தல் (பாட இலக்கம் 8 – 100 புள்ளிகள்) :

முகாமைத்துவ தகவல்கள் தொடர்பாக காலத்திற்கேற்ற வகையில் உண்மைத் தன்மை மற்றும் முழுமைத் தன்மையின் முக்கியத்துவம்
கணினிப் பயன்பாட்டின் உதவி
காலாந்தர நிமித்த காரண அறிக்கை
கூட்ட அறிக்கை மற்றும் குறிப்பெடுத்தல்
முகாமைத்துவ அறிக்கைக் கட்டமைப்பு
விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய விளைவுகள்
பயன்பாட்டின் பொருள் விளக்கம்
மாறிகள் தொடர்பாக கருத்து தெரிவித்தல்
தரவுப் பகுப்பாய்வின் புள்ளிவிபரமுறைப் பயன்பாடு
செயலாற்றுகையினை ஒப்பீடு செய்தல்
முகாமைத்துவ அறிக்கைகளில் விகிதங்கள் மற்றும் சதவீதப் பயன்பாடு
கோட்டுச் சித்திரங்கள் மூலம் குறித்துக்காட்டல்
தொழில்சார் உரைகள் மற்றும் விரிவுரைகளுக்கு செவிமடுத்தல்
விடயம்சார் குழுக்களின் கலந்துரையாடல்
பேரவையின் திறமைகள்
உரைகளை நடாத்துதல்

**குறிப்பு**.- சித்தியெய்துவதற்காக விண்ணப்பதாரிகள் சகல வினாப்பத்திரங்களிலும் 40% ஆன புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

12.5 இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III இனையுடைய அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (2010.09.10 ஆந் திகதிய 1670/ 32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைத் திட்டமிடல் சேவைப் பிரமாணக் குறிப்பின் "இ" பின்னிணைப்பு)

முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான பாடங்கள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது :

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1. | எண்ணக்கருக்களைத் திட்டமிடல் செயல்முறைத் திட்டம் மற்றும் திட்ட மிடும் நிறுவனங்கள் | 03 மணித்தியாலங்கள் | 19 |
| 2. | பொருளாதார பகுப்பாய்வு மற்றும் புள்ளிவிபரம் | 03 மணித்தியாலங்கள் | 10 |
| 3. | கருத்திட்டத் திட்டமிடல், அமுல் நடாத்துதல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | 03 மணித்தியாலங்கள் | 11 |
| 4. | நிறுவன ரீதியான ஒழுங்குவிதிகள் மற்றும் அரசதுறை நிதியிடல் முறைமைகள் | 03 மணித்தியாலங்கள் | 12 |
| 5. | ஆங்கில மொழி | 03 மணித்தியாலங்கள் | 13 |

12.5.1 சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் நியமனக் கடிதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த கால எல்லையினுள் அல்லது அதற்கு முன்னர் பரீட்சையினை சித்தியெய்திருத்தல் வேண்டும் என்பதோடு, சகல பாடங்களிலும் ஒரே தடவையில் அல்லது வேறு வேறாக பல தடவைகளில் அல்லது தோற்றுவதற்கு அலுவலரொருவருக்கு அனுமதி உண்டு.

12.5.2 *எண்ணக் கருக்களை திட்டமிடல், செயல்முறைத் திட்டம் மற்றும் திட்டமிடும் நிறுவனங்கள் (பாட இலக்கம் 9) :*

(i) தேசிய குறிக்கோள்கள் மற்றும் முன்னுரிமைகள் மற்றும் அவைகளை அடைவதற்கான கொள்கை கட்டமைப்பும் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களும் ;

(ii) தேசிய திட்டமிடலுக்கான செயல்முறைத் திட்டம், திட்டமிடலிலுள்ள பாரிய சிக்கல்களுள்ள விடயங்கள், பொது மக்கள் பங்கேற்பு மற்றும் வளங்களைப் பயன்படுத்தல் போன்றவை ;

(iii) தேசிய திட்டமிடலுக்கான தன்மையும் மூலங்களும், தரவுச் சேகரிப்பு, பொருட்கோடல், பகுப்பாய்வு, வெளிக்கள மேற்பார்வை மற்றும் விசாரணை குடித்தொகைப் பரம்பல் தொடர்பான எண்ணக்கருக்கள், பொருளாதார முற்கணிப்பு மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு ஆகியன.

12.5.3 *பொருளாதார பகுப்பாய்வும் புள்ளிவிபரங்களும் (பாட இலக்கம் 10) :*

(i) உற்பத்தி மற்றும் பகிர்ந்தளிக்கும் கோட்பாட்டிற்கு விசேட முக்கியத்துவத்துடன் கூடிய பொருளாதாரக் கொள்கைகள் ;

(ii) பணம், வங்கி முறைமைகள், பன்னாட்டு நிதியிடல் முறைமைகள் மற்றும் வியாபாரம் ;

(iii) நாணயப் பகுப்பாய்வு, நிதி வர்த்தகம் மற்றும் வரிக் கொள்கைப் பகுப்பாய்வு ;

(iv) இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பு ;

(v) பொருளாதாரத்தில் மீளாய்வு ;

(vi) தொழில்நுட்ப ரீதியான செயல்திறனுடைய மற்றும் செயல்திறனற்ற மனிதவலு மற்றும் வெளிநாட்டு உதவிகள் உட்பட ஏனைய சொத்துக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் அவற்றின் பயன்பாடு ;

(vii) பொருளாதார மற்றும் சமூக நிகழ்வுகள் ;

(viii) பொருளாதாரப் பகுப்பாய்வு மற்றும் திட்டமிடலின் போது உபயோகப்படுத்தும் அடிப்படை புள்ளிவிபர எண்ணக்கருத்துக்களும் மற்றும் முறைமைகளும் ;

(ix) பயன்பெறுதல்/செலவுப் பகுப்பாய்வு ஆகியனவற்றின் கோட்பாடுகள்.

12.5.4 *கருத்திட்ட திட்டமிடல், அமுல்நடாத்தல், மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்தல் (பாட இலக்கம் 11) :*

(i) திட்டமிடல், கருத்திட்டங்களையும் கருத்திட்ட திட்டமிடல் கொள்கைகளையும் இனங்கண்டு வரையறுத்தல், கோட்பாடுகள். அமைவிடங்களை தெரிவுசெய்தல், தொழில்நுட்பம், செலவு மற்றும் நன்மைகளை மதிப்பீடு செய்தல், தொழில்நுட்ப, நிதியிடல் மற்றும் பொருளாதார பகுப்பாய்வு ஆகியன ;

(ii) கருத்திட்டங்களையும், நிகழ்ச்சித் திட்டங்களையும், முறையாகவும் சரியான நேரத்திலும் நிறைவேற்றல், விபரமான செயற்பாட்டுத் திட்டங்களையும் அமுல்நடாத்தும் அட்டவணை களையும் தயாரித்தல், கண்காணித்தலையும் முன்னேற்றக் கட்டுப்படுத்தல்களையும் ஒருங்கிணைத்தல் மற்றும் பின்னூட்டல் நடவடிக்கை எடுத்தல் ;

(iii) கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல், கருத்திட்டங்களினதும் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினதும் ஒட்டுமொத்தத்தினை மதிப்பீடு செய்தல் மற்றும் செலவு தொடர்பான பயன்களைப் பகுப்பாய்வு செய்தல்.

12.5.5 *நிறுவன ஒழுங்குவிதிகளும் அரச துறையின் நிதியிடல் முறைமைகளும் (பாட இலக்கம் - 12) :*

(i) அரசாங்க நிதியிடல் ஒழுங்குவிதிகள் 1 ஆவது தொகுதி (X ஆவது அத்தியாயம் தவிர்ந்த).

(ii) தாபன விதிக்கோவையின் அத்தியாயங்கள் - VII, IX, XI, XII, XV, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII ; அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதிமுறை மற்றும் சட்டங்களின் அத்தியாங்கள் I தொடக்கம் VI வரையும்.

(iii) இலங்கையின் நிதி நிர்வாகம்.- அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான இலங்கை நியதிச்சட்ட ஏற்பாடுகளின் நிதியிடல் கட்டுப்பாடு, அரச நிதி திரட்டிய நிதியம் மற்றும் அதனது செயற்பாட்டின் மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு, ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிக்கோள்களும் ஒதுக்கீட்டு முறைமையும், அரசாங்க வருமானம், நிதி அமைச்சரின் அதிகாரமும் வகிபங்கும், திறைசேரியின் அதிகாரங்களும் வகிபங்கும், ஆணைச்சீட்டுக்கள் மற்றும் அதிகாரம்பெற்ற கட்டுநிதி அதிகாரம், கணக்காய்வாளர் நாயகமும் அவரின் அதிகாரங்கள் மற்றும் வகிபங்கு, அரச செலவின செயற்குழு, பொது முயற்சிகள் செயற்குழு ;

(iv) கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோரின் நியமனங்களும் அதிகாரங்களும் வகிபங்கும் ;

(v) அரச செலவின் திட்டமிடலும் முகாமைத்துவமும், அமைப்புக்களின் குறிக்கோள்களையும் வகிபங்குகளையும் இனங்காணல், வருடாந்த வருமானங்களையும் மதிப்பீடுகளையும் தயாரித்தல் மற்றும் இறுதித் தீர்மானங்களை எடுத்தல், அங்கீகரிக்கப்பட்ட செலவினத்தில் மாற்றங்களை மேற்கொள்ளல், வீரமொங் வழிமுறையினை செயற்படுத்துதல், அரச துறை பதவி அணியின் முகாமைத்துவம், அரச குறைநிரப்பு மதிப்பீடு ;

(vi) *அரச பெறுகை வழிமுறை*.- பொருட்கள் சேவைகள் மற்றும் வேலை ஆகியனவற்றைப் பெறுதல், கேள்விப்பத்திர குழுக்களையும் தொழில்நுட்ப மதிப்பீட்டு செயற்குழுக்களின் நியமனங்கள், அதிகாரங்கள் மற்றும் வகிபங்குகள், கேள்விப்பத்திர மதிப்பீட்டு வழிமுறைகள், வெளிநாட்டு நிதியுதவியினால் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்களின் முகாமைத்துவம் ;

12.5.6 *ஆங்கில மொழி (பாட இலக்கம் 13)*.- திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் திட்டங்களைத் தயாரித்தலும் முகாமைப்படுத்தலும் ஆகிய விடயங்கள் தொடர்பாக பரீட்சார்த்திகளின் கல்விசார் மற்றும் தொழில்சார் ஆங்கில மொழி அறிவினைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக ஆங்கில மொழியில் எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்படும்.

**குறிப்பு**:- சித்தியடைவதற்காக விண்ணப்பதாரிகள் சகல வினாப்பத்திரங்களிலும் 40% ஆன புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

13. இப்பரீட்சைக்கான பரீட்சை நேர அட்டவணை கீழ்வருமாறு அமைந்துள்ளது :

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 1. | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர் களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 01-I | 2016.10.22 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | இலங்கையின் சட்ட முறைகள் | 01-II | 2016.10.22 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 01-III | 2016.10.23 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | நிர்வாகம் | 02-I | 2016.11.05 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | பொருளியல் மற்றும் சமூகவியல் | 03 | 2016.10.23 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | அரச துறையில் நிதி முகாமைத்துவம் மற்றும் பெறுகை நடைமுறை | 04 | 2016.11.19 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 2. | இலங்கைப் பொறியியல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 05-I | 2016.11.20 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | நிர்வாகம் | 02-II | 2016.11.06 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| 3. | இலங்கை விஞ்ஞான சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 05-II | 2016.11.20 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | நிர்வாகம் | 02-III | 2016.11.06 | பி.ப 12.30 - பி. ப. 3.30 |
| 4. | இலங்கைக் கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத் திறன்காண் தடைப் பரீட்சை | நிதி முறைகள் | 05-II | 2016.11.20 | பி. ப. 12.00 - பி. ப. 3.30 |
| | | நிர்வாகம் | 02-III | 2016.11.06 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| 5. | இலங்கைக் கணக்காளர் சேவையின் III ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | அரசாங்க நிதியியல் வழிமுறை | 06 | 2016.11.19 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | சட்டம் மற்றும் முகாமைத்துவம் | 07 | 2016.11.26 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | நிர்வாகம் | 02-IV | 2016.11.05 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல்களை முன்வைத்தல் | 08 | 2016.11.26 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| 6. | இலங்கைத் திட்டமிடல் சேவையின் III ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | எண்ணக்கருக்களை திட்டமிடல், செயல் முறைத் திட்டம் மற்றும் திட்டமிடும் நிறுவனங்கள் | 09 | 2016.12.03 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | பொருளாதார பகுப்பாய்வும் புள்ளிவிபரங்களும் | 10 | 2016.12.03 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | கருத்திட்டத் திட்டமிடல், அமுல் நடாத்தல், மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்தல் | 11 | 2016.12.10 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | நிறுவன ஒழுங்குவிதிகளும் அரச துறையின் நிதியிடல் முறைமைகளும் | 12 | 2016.12.10 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | ஆங்கில மொழி | 13 | 2016.12.11 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |

14. 14.1 வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கு உரித்துடைய பாடங்களில் சித்தியெய்தும் தேவைப்பாட்டிலிருந்தான விலக்களிப்புக்கள் பின்வரும் விதத்தில் செய்யப்பட வேண்டும் :

| பரீட்சை | பாடம் | விலக்களிப்பதற்கு தேவைப்படும் தகைமைகள் |
|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் | சட்டம் | வழக்குரைஞர் (Barrister), உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டம் தொடர்பான பட்டதாரியாக இருத்தல். |

**குறிப்பு 1.**- இலங்கை நிர்வாக சேவையின் 2005.11.14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க சேவைப்பிரமாணக் குறிப்பின்கீழ் 2012.07.01 ஆந் திகதி தொடக்கம் 2013.12.23 ஆந் திகதிவரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான குறித்த சேவைப் பிரமாணக் குறிப்பின்படி முதலாவது வினைத்திறன்காண் தடையில் சமூகவியல் மற்றும் பொருளியல் பாடங்களுக்கு வழங்கப்படும் விலக்களிப்பு இதற்குப் பொருந்தும்.

14.2 இலங்கை நிர்வாகசேவைப் பிரமாணக் குறிப்பின் 1.5(ஆ) இன் இடைக்கால ஏற்பாடுகளுக்கமைய, மேற்படி சேவைப்பிரமாணக் குறிப்பானது அமுலுக்கு வரும் திகதியன்று (2012.07.01 ஆந் திகதியன்றுக்கு) முன்னைய சேவைப்பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின்கீழ் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்துமாறு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2014.12.31 ஆந் திகதியிலுள்ளவாறு அதனைச் சித்தியெய்துவதற்கு இயலாமலிருக்கும் அலுவலர்கள் ஏற்கனவேயுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைய ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினதும் பாடங்களுக்கு ஒத்திசையும் ஏற்கனவேயுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பின்கீழ் நடாத்தப்படும் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைப் பாடங்களை சித்தியெய்துவதன் மூலம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைப் பூர்த்திசெய்தல் வேண்டும். ஒத்திசைவுடைய பாடங்கள் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க சேவைப் பிரமாணக் குறிப்பு | 2013.12.23 ஆந் திகதிய 1842/02 ஆம் இலக்க புதிய சேவைப்பிரமாணக் குறிப்பு |
|---|---|
| நிர்வாகம்<br>முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | நிர்வாகம்<br>முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை |
| அரசாங்க துறையின் நிதி முகாமைத்துவம்<br>இரண்டாம் (II) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | அரசாங்க துறையின் நிதி முகாமைத்துவம் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை |
| (அ) பொருளியல் அல்லது<br>(ஆ) சமூகவியல்<br>முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | பொருளியல் மற்றும் சமூகவியல்<br>முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை |
| சட்டம்<br>முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | சட்டம்<br>முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை |
| ஆங்கிலம்<br>முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | தொடர்புமொழி (ஆங்கிலம்) தேர்ச்சி<br>இரண்டாம் (II) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை/ஆங்கில மொழி விசேட பரீட்சை |

15. **பெறுபேறுகளை வெளியிடுதல்.-** இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த/ தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். இலத்திரனியல் ஆவணம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் தொடர்பாக சனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்ட SP/SB/1/13 ஆம் இலக்க மற்றும் 2009.10.13 ஆந் திகதிய சுற்றறிக்கையின்படி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பெறுபேறு அலுவலர்களுக்கு வெளியிடப்பட்டதாக கருதப்பட வேண்டும். அதற்கிணங்க, திணைக்களத் தலைவர்கள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பெறுபேற்றின் குறித்த பிரதிகளை அலுவலரின் பிரத்தியேகக் கோவையில் உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு அனுமதிக்கப்படாது.

16. இப்பரீட்சை அறிவித்தல் ஏற்பாடுகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயமானது பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் இறுதித் தீர்மானமாகக் கொள்ளப்படும்.

17. இப்பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படுகின்றது. குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படின் சிங்கள மொழியின் சொற்றொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

ஜே. ஜே. ரத்னசிரி,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2016, ஒகத்து 26.

9-435 9-478

---

## கல்வி அமைச்சு

### தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நடாத்தப்படுகின்ற சேவை முன் மூன்று வருட கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியை பயிலுவதற்கு ஆசிரிய மாணவர்களை அனுமதித்தல் - 2016

1.0 தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றில் மூன்று வருட கால சேவை முன் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியை தொடர்வதற்காக ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பதற்குத் தேவையான கல்வித் தகைமைகளையும், தகவுத்திறன்களையுமுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 தான் விண்ணப்பிக்கின்ற பாடநெறியின் கீழ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் மிகுந்த அவதானத்துடன் வாசித்து விளங்கிக்கொள்ளுதல் தொடர்பான பொறுப்பு விண்ணப்பதாரிகளுக்கு உரித்தாகும்.

1.2 வர்த்தமானி அறிவித்தலில் "விண்ணப்பத்தை தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்" 7.0, 7.1 மற்றும் 7.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிக்கும் சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை தொடர்பாக விசேட கவனத்தை செலுத்த வேண்டும்.

2.0 **தகவுத்திறன் :**

சகல விண்ணப்பதாரிகளும் :

2.1 இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

2.2 சிறந்த நடத்தை, சிறந்த உடல், உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

2.3 வயது:

2.3.1 2016.01.01 அன்று 25 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

2.3.2 பௌத்த சமய, கத்தோலிக்க சமய, கிறிஸ்தவ சமய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கின்ற மதகுருமார்கள் / துறவிகள் 2016.01.01 அன்று 30 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

*2.4* விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும்.

*3.0* **அடிப்படை கல்வித்தகைமைகள் :**

ஒவ்வொரு பாடநெறிக்காகவும் விசேடமாக குறிப்பிடப்பட்ட விடயங்கள் தவிர இந்தப் பகுதியில் காட்டப்பட்டுள்ள தகைமைகள் கட்டாயமான கல்வித்தகைமைகள் ஆகும்.

*3.1* 2014 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் மூன்று (03) பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் இரண்டு (02) பாடங்களில்) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

*3.2* க.பொ.த(சா.த) பரீட்சையில் தாய்மொழி (சிங்கள மொழி/ தமிழ் மொழி), கணிதம் உள்ளடங்காலாக இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மூன்று (03) திறமைச்சித்திகளுடன் பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்/ ஆரம்ப பிரிவெனா இறுதிப் பரீட்சையில் கணிதம், சிங்கள மொழி உள்ளடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மூன்று (03) திறமைச்சித்திகளுடன் பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (முதலாவது தடவையில் குறைந்தபட்சம் பிரதான ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் கட்டாயமானதாகும்.).

**கவனத்திற் கொள்க.-**

இதன் போது க.பொ.த (சா.த) பரீட்சையில் 2008 புதிய பாடத்திட்டத்தின்படி மற்றும் அதற்குமுன் நடைமுறைப்படுத்தப்பட்ட பழைய பாடத்திட்டத்தின்படி கீழ்க்குறிப்பிட்ட பாடங்கள் பிரதான பாடங்களாக கொள்ளப்படுகின்றன.

2008 – க.பொ.த (சா.த) புதிய பாடத்திட்டத்தின் கீழ் கொள்ளப்படுகின்ற பிரதான பாடங்கள்:-

(i)சமயம் (ii) சிங்கள மொழியும் இலக்கியமும்/தமிழ் மொழியும் இலக்கியமும் (iii) ஆங்கிலம் (iv) கணிதம் (v) வரலாறு (vi) விஞ்ஞானம்(vii) முதலாவது அல்லது மூன்றாவது தொகுதி பாடங்களில் யாதேனும் ஒரு பாடம் (viii) இரண்டாவது தொகுதி பாடங்களில் யாதேனும் ஒரு பாடம்.

2008 க்கு முன் நடைமுறைப்படுத்தப்பட்ட க.பொ.த (சா.த) பழைய பாடத்திட்டத்தின் கீழ் கொள்ளப்படுகின்ற பிரதான பாடங்கள்:-

(i)சமயம் (ii) சிங்கள மொழியும் இலக்கியமும்/தமிழ் மொழியும் இலக்கியமும் (iii) ஆங்கிலம் (iv) கணிதம் (v) விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (vi) சமூகக்கல்வியும் வரலாறும் (vii) அழகியல் பாடங்களில் யாதேனும் ஒரு பாடம் (viii) தொழில்நுட்பப் பாடங்களில் யாதேனும் ஒரு பாடம்.

ஆரம்ப பிரிவெனா இறுதிப் பரீட்சையில் கட்டாய பாடங்கள் – (i) சிங்களம் (ii) பாளி (iii) சமஸ்கிருதம் (iv) ஆங்கிலம் (v) கணிதம் (vi) திரிபீடக தர்மம்.

*3.3* அவ்வப் பாடநெறிகளுக்குரிய க.பொ.த (சா.த) பரீட்சையில் விசேட தகைமைகள் மேலே 3.2 இற் குறிப்பிட்டதற்கு அமைய இரு அமர்விலும் பூரணப்படுத்தாதுவிட்டால் மூன்றாவது அமர்விலே பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (விசேட தகைமை தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படுவது 3.1 மற்றும் 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் ஆகும்.)

*3.4* ஆங்கில மொழிமூலப் பாடநெறிக்கான ஆங்கில மொழித் தேர்ச்சி

*3.4.1* ஆங்கில மொழிப் பாடநெறி தவிர்ந்த ஆங்கில மொழி மூலம் நடைபெறும் ஏனைய பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி (C)/ ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும்.

*3.4.2* தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் ஆகிய பாடநெறிகள் ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படுகின்ற போதிலும், சிங்களம் மற்றும் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களை அடிப்படையாகக் கொண்டு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் க.பொ.த (உ.த) பயின்ற மாணவர்களில் இருந்து ஆட்சேர்க்கப்படும்.

3.5 சித்திரம்/நடனம் (கீழைத்தேயம்)/ நடனம் (பரதம்)/ சங்கீதம் (கீழைத்தேயம்)/ சங்கீதம் (கர்நாடகம்)/ நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பின்வருமாறு தரப்படுத்தப்பட்டு தெரிவு செய்யப்படுவர்.

- விண்ணப்பதாரி விண்ணப்பிக்கின்ற அழகியல் பாடத்திற்காக உரிய வருடத்தில் க.பொ.த. (உ.த) பரீட்சையில் உரிய பாடத்தில் பெற்றுக்கொண்ட தரத்தினடிப்படையில் வரிசைப்படுத்தப்படுவதோடு அத்தொடரொழுங்கு க.பொ.த. (உ.த) பரீட்சையில் பெற்றுக்கொண்ட Z புள்ளி அடிப்படையில் வரிசைப்படுத்தப்படும். அதன்படி கூடிய Z புள்ளியுடன் உரிய அழகியற் பாடத்தில் கூடிய தரத்தையுடய விண்ணப்பதாரிக்கு (ஏனைய ஆட்சேர்க்கும் நியதிகளுக்கு ஏற்புடையதான) முன்னுரிமை வழங்கப்படும்.

3.6 தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கின்ற அனைத்து கல்வி/ தொழில் சான்றிதழ்களினதும் செல்லுபடியாகும் திகதி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினம் அல்லது அதற்கு முன்னரான தினமொன்றாக இருத்தல் வேண்டும்.

4.0 **ஒவ்வொரு பாடநெறிக்குமான தகைமைகள் :**

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நடைமுறையிலுள்ள ஒவ்வொரு பாடநெறிக்கும் ஆட்சேர்த்துக் கொள்வதற்குரிய கல்வித் தகைமைகளும் ஏனைய விசேட தகைமைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**4.1 பாடநெறி இலக்கம் 01 - ஆரம்பக்கல்வி (சிங்களம்)**
**ஆரம்பக்கல்வி (தமிழ்)**

4.1.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் கலைப்பிரிவில் சிங்களம்/ தமிழ் உட்பட மூன்று (03) பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்கின்ற தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் சிங்களம்/ தமிழ் உட்பட இரண்டு (02) பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

க.பொ.த(சா.த) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழியுடன், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆங்கிலப் பாடம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அல்லது

4.1.2

4.1.2.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் அல்லாத கலைப்பிரிவில் மூன்று (03) பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்கின்ற தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் இரண்டு (02) பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்,

அல்லது

4.1.2.2 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் வர்த்தகம்/ விஞ்ஞானம் (பௌதிக விஞ்ஞானம்/ உயிரியல் விஞ்ஞானம்) மற்றும் ஏனைய பாடத்துறையில் மூன்று (03) பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்கின்ற தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் இரண்டு (02) பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

க.பொ.த (சா.த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழியில் விசேட சித்தியும் கணிதத்தில் திறமைச்சித்தியுடன் ஆங்கிலப் பாடம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**கவனத்திற் கொள்க.-**

(i) ஆட்சேர்க்கப்படுகின்ற போது க.பொ.த(உ.த) பரீட்சையில் தோற்றி கலைப்பிரிவில் சிங்களம்/ தமிழ் மொழி பாடத்தை பயின்ற விண்ணப்பதாரிகளில் 60% உம்

(ii) க.பொ.த(உ.த) பரீட்சையில் தோற்றி சிங்களம்/ தமிழ் மொழி அல்லாத பாடங்களில் கலைப்பிரிவில் விண்ணப்பித்தவர்களில் 10% உம், வர்த்தகம், விஞ்ஞானம் (பௌதிக விஞ்ஞானம்/ உயிரியல் விஞ்ஞானம்) மற்றும் ஏனைய பாடத்துறையில் தோற்றியவர்களில் 10% படி தெரிவு செய்யப்படுவர்.

***4.2 பாடநெறி இலக்கம் 02 - விஞ்ஞானம் (சிங்களம்)***
***விஞ்ஞானம் (தமிழ்)***
***விஞ்ஞானம் (ஆங்கிலம்)***

4.2.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் ஆகிய உயிரியல் விஞ்ஞான பாடங்களுள் மூன்று (03) பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்கின்ற தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் உயிரியல் பாடத்துடன் மேற்குறித்த இரண்டு (02) பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.2.2 கணிதப் பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் சிங்கள/ தமிழ் மொழி உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த(சா.த) இல் சித்தியடைந்திருத்தல்.

**கவனத்திற் கொள்க :**

- விஞ்ஞானம் (ஆங்கில மொழி மூலம்) பாடநெறிக்காக.- இந்த பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் முழு மாணவ எண்ணிக்கையில் க.பொ.த (உ.த) பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் தோற்றிய விண்ணப்பிப்பவர்களில் 60% உம், மிகுதி 40% சிங்கள/தமிழ் மொழி மூலம் க.பொ.த (உ.த) பரீட்சையில் தோற்றிய விண்ணப்பிப்பவர்களிலிருந்தும் சேர்த்துக்கொள்ளப்படுவர். (சேர்த்துக்கொள்ளப்படும் போது ஆங்கில மொழிமூலம் க.பொ.த (உ.த) பரீட்சையில் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

***4.3 பாடநெறி இலக்கம் 03 - கணிதம் (சிங்களம்)***
***கணிதம் (தமிழ்)***
***கணிதம் (ஆங்கிலம்)***

4.3.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் இணைந்த கணிதம், உயர்கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பௌதிக விஞ்ஞான பாடங்களில் மூன்று (03) பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்கின்ற தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் கணித பாடவிதானத்திற்குரிய இணைந்த கணிதம் அல்லது உயர்கணிதம் ஆகிய ஒரு பாடத்துடன் மேற்கூறப்பட்ட இரண்டு (02) பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.3.2 விஞ்ஞானம்/விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் சிங்களம்/ தமிழ் மொழி உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த(சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**கவனத்திற் கொள்க :**

- கணிதம் (ஆங்கில மொழி மூலம்) பாடநெறிக்காக-

இந்த பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் முழு மாணவ எண்ணிக்கையில் க.பொ.த (உ.த) பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் தோற்றிய விண்ணப்பிப்பவர்களில் 60% உம் மிகுதி 40% சிங்கள/தமிழ் மொழி மூலம் க.பொ.த (உ.த) பரீட்சையில் தோற்றிய விண்ணப்பிப்பவர்களிலிருந்தும் சேர்த்துக்கொள்ளப்படுவர். (சேர்த்துக்கொள்ளப்படும் போது ஆங்கில மொழிமூலம் க.பொ.த (உ.த) பரீட்சையில் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

**4.4 பாடநெறி இலக்கம் 04 - சமூக விஞ்ஞானம் (தமிழ்)**

- **(சமூக விஞ்ஞானப் பாடநெறி ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு மட்டும் நடாத்தப்படும். எனவே இப்பாடநெறிக்கு 6.3 பந்திக்கமைவாக தகைமைபெறுவோர் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.)**

4.4.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த) பரீட்சையில் வரலாறு, அரசியல் விஞ்ஞானம், புவியியல் ஆகிய பாடங்களில் எவையேனும் ஒன்று உட்பட மூன்று (03) பாடங்களில் (தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் மேற்படி பாடங்களில் ஒன்று உட்பட இரண்டு (02) பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.4.2 சமூகக்கல்வியும் வரலாறும் அல்லது வரலாறு / குடியுரிமைக்கல்வி / புவியியல் பாடங்களில் எவையேனும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த(சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**4.5 பாடநெறி இலக்கம் 05 - பௌத்த சமயம்**

பௌத்த சமயப் பாடநெறிக்கு பௌத்த பிக்குகளும்/ பிக்குணிகளும் மற்றும் புத்தசாசன அமைச்சின் கீழ் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட தசசில் தாய்மார்களும் மற்றும் சாதாரண தொண்டர்களும் விண்ணப்பிக்கலாம். (சாதாரண தொண்டர்களின் கல்வித் தகைமைகள் யாவும் விண்ணப்பதாரியின் சாதாரண பெயரிலேயே பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்).

4.5.1 2014 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் பௌத்த சமயம், பௌத்த நாகரீகம், பாளி, சிங்களம் ஆகிய பாடங்களில் இரண்டு உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.5.2 க.பொ.த (சா.த) பரீட்சையில் சிங்களம், பௌத்த சமயம், கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்/ சிங்கள மொழி, கணிதம், திரிபீடக தர்மம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் அடிப்படை பிரிவெனா இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.5.3 பிரசீன ஆரம்பப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.5.4 பௌத்த தர்மாச்சாரிய பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.5.5 சமயப் பாடசாலை இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**கவனத்திற் கொள்க :**

தெரிவு முன்னுரிமை ஒழுங்கு முறை :

(அ) 4.5.1, 4.5.2, 4.5.3, 4.5.4, 4.5.5 உட்பட சகல சான்றிதழ்களும் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(ஆ) 4.5.1, 4.5.2, மற்றும் 4.5.3 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.

(இ) 4.5.1, 4.5.2 மற்றும் 4.5.4 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.

(ஈ) 4.5.1, 4.5.2 மற்றும் 4.5.5 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.

(உ) 4.5.1 மற்றும் 4.5.2 சான்றிதழ்களை உடைய விண்ணப்பதாரிகள்.

**4.6 பாடநெறி இலக்கம் 06 - இந்து சமயம்**

4.6.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே தடவையில் இந்து சமயம், இந்து நாகரிகம், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களில் எவையேனும் ஒரு பாடம் உட்பட எல்லாமாக மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.6.2 தமிழ் மொழி, கணிதம் மற்றும் இந்து சமயம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.6.3 சைவ சித்தாந்த பண்டிதர் சான்றிதழ் பெற்றிருத்தல்.

4.6.4 சைவப்புலவர் சான்றிதழ் பெற்றிருத்தல்.

4.6.5 இளம் சைவப்புலவர் சான்றிதழ் பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க.-**

தெரிவு முன்னுரிமை ஒழுங்கு முறை

(அ) 4.6.1, 4.6.2 ஆகிய இரண்டு உட்பட சகல சான்றிதழ்களும் உடைய விண்ணப்பதாரிகள்.

(ஆ) 4.6.1, 4.6.2, 4.6.5 ஆகிய சான்றிதழ்களுடன் ஏனைய இரண்டு தகைமைகளில் ஒரு சான்றிதழுடைய விண்ணப்பதாரிகள்.

(இ) 4.6.1, 4.6.2 ஆகிய இரண்டுடன் ஏனைய மூன்று தகைமைகளில் ஏதாவதொரு சான்றிதழுடைய விண்ணப்பதாரிகள்.

(ஈ) 4.6.1, 4.6.2 சான்றிதழுடைய விண்ணப்பதாரிகள்.

**4.7 பாடநெறி இலக்கம் 07 - இஸ்லாம்**

4.7.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் இஸ்லாம், இஸ்லாமிய நாகரீகம், அரபு ஆகிய பாடங்களில் ஒரு பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

4.7.2 தமிழ் மொழி, கணிதம் மற்றும் இஸ்லாம் சமயம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.7.3 அல்-ஆலிம் (ஆரம்ப பரீட்சையிலும் சகல பாடங்களிலும், இறுதி பரீட்சையில் சகல பாடங்களிலும்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.7.4 அல்-ஆலிம் ஆரம்ப பரீட்சையின் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்.

4.7.5 மௌலவி சான்றிதழ் பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க.-**

தெரிவு முன்னுரிமை ஒழுங்குமுறை :

(அ) 4.7.1, 4.7.2, 4.7.3, 4.7.4 மற்றும் 4.7.5 ஆகிய சகல சான்றிதழ்களைப் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(ஆ) 4.7.1, 4.7.2, 4.7.4, மற்றும் 4.7.5 ஆகிய சான்றிதழ்களைப் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(இ) 4.7.1, 4.7.2, மற்றும் 4.7.5 ஆகிய சான்றிதழ்களைப் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(ஈ) 4.7.1 மற்றும் 4.7.2 ஆகிய சான்றிதழ்களைப் பெற்ற விண்ணப்பதாரிகள்.

**4.8 பாடநெறி இலக்கம் 08 - கத்தோலிக்க திருமறை / கிறிஸ்தவம் (சிங்களம்)**
**கத்தோலிக்க திருமறை / கிறிஸ்தவம் (தமிழ்)**

4.8.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் உள்ளடங்கலாக பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

க.பொ.த (உ.த) பரீட்சையில் கத்தோலிக்க சமயம்/ கிறிஸ்தவ சமயம்/ கிறிஸ்தவ நாகரீகம் பாடத்தில் சாதாரண சித்தி அல்லது க.பொ.த (சா.த) பரீட்சையில் கத்தோலிக்க சமயம்/ கிறிஸ்தவ சமயப் பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல்,

அத்துடன்

விண்ணப்பதாரி கத்தோலிக்க சமய/ கிறிஸ்தவ சமய ஆசிரியராவதற்குத் தகைமை உடையவர் என கத்தோலிக்க சமயத்திற்காக கத்தோலிக்க மறை மாவட்ட ஆயரின் சான்றிதழையோ, கிறிஸ்தவ சமயத்திற்காக தேசிய கிறிஸ்தவ சபை சான்றிதழையோ பெற்றிருத்தல்.

4.8.2 கத்தோலிக்க சமயத்துக்கு விண்ணப்பிப்பவர்களின் தெரிவுகள் பின்வரும் தகைமைகளுக்கமைய முன்னுரிமை ஒழுங்கின்படி நடைபெறும்.

4.8.2.1 தேசிய குருத்துவக் கல்லூரியில் இறையியல் தொடர்பான 4 வருடகால பாடநெறிச் சான்றிதழ்

அல்லது

4.8.2.2 தேசிய குருத்துவக் கல்லூரியினால் நடாத்தப்படும் மெய்யியல் பாடநெறிச் சான்றிதழ்

அல்லது

4.8.2.3 இறையியல் கல்லூரியினால் நடாத்தப்படும் 3 வருட சமயக் கல்வி பாடநெறிச் சான்றிதழ்

அல்லது

4.8.2.4 துறவியாவதற்கான சமயக் கற்கை மற்றும் பயிற்சிப் பாடநெறியை (Novitiate) வெற்றிகரமாகத் தொடர்ந்து பூர்த்திசெய்தமைக்கான துறவற சபைத் தலைவரினால் அல்லது உரிய மறை மாவட்ட ஆயரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்

அல்லது

4.8.2.5 தேசிய மறைக்கல்வி மையத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க மறையாசிரியர் (சமய ஆசிரியர்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்,

அதாவது

மறையாசிரியர் கௌரவ (சமய ஆசிரியர் 03)

அல்லது

மறையாசிரியர் விசேட (சமய ஆசிரியர் 02)

அல்லது

மறையாசிரியர் சாதாரண (சமய ஆசிரியர் 01)

அல்லது

4.8.2.6 க.பொ.த (உ.த) பரீட்சையில் கத்தோலிக்க சமயம்/ கிறிஸ்தவ சமயம் / கிறிஸ்தவ நாகரீகம் பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

4.8.3 கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்யும் ஒழுங்குமுறை கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமை அடிப்படையில் நடைபெறும்.

4.8.3.1 பிலிமத்தலாவையில் உள்ள இலங்கை இறையியல் கல்லூரி டிப்ளோமா தராதரப்பத்திரம் பெற்றிருத்தல்.

4.8.3.2 தேசிய கிறிஸ்தவ சபையினால் நடாத்தப்படும் சமய அறிவு தொடர்பான தேசிய சான்றிதழ் (மறை ஆசிரியர்) பெற்றிருத்தல்.

**கவனத்திற் கொள்க.-**

(i) கத்தோலிக்க/கிறிஸ்தவ சமய (சிங்கள மொழி) பாடநெறிக்கு விண்ணப்பதாரர்களை தெரிவு செய்யும் போது ஒவ்வொரு மாவட்டங்களில் உள்ள கத்தோலிக்க சனத்தொகை அடிப்படையில் அந்த அந்த மாவட்டங்களில் விண்ணப்பதாரர்களின் Z புள்ளி ஒழுங்கு முறையில் தெரிவு இடம்பெறும்.

(ii) சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையில் 85% தெரிவின்போது 4.8.1 இன் கீழ் தகைமையுள்ள கத்தோலிக்க சமய விண்ணப்பதாரிகளுள் 4.8.2 இன் கீழ் காட்டப்பட்டுள்ள ஒழுங்குமுறைமைப்படி தெரிவு இடம்பெறும். 85% கத்தோலிக்க சமய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அவ்வெற்றிடங்களுக்கு கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

(iii) சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையில் 15% வீதமான வெற்றிடங்கள் மேலேயுள்ள 4.8.1 இன் கீழ் தகைமையுள்ள கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரிகளுள் 4.8.3 இன் கீழ் தரப்பட்டுள்ள ஒழுங்கு முறைப்படி தெரிவு இடம்பெறும். 15% வீதமான கிறிஸ்தவ சமய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அவ்வெற்றிடங்களுக்கு கத்தோலிக்க சமய விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

(iv) சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த விண்ணப்பதாரிகளுள் 40% வீதமானோர் கத்தோலிக்க, கிறிஸ்தவ மதகுருமாரிலிருந்து தெரிவு செய்யப்படுவர். 40% வீதமான மதகுரு விண்ணப்பதாரிகள் இல்லையாயின் அவ்வெற்றிடம் ஏனைய விண்ணப்பதாரிகளால் நிரப்பப்படும்.

(v) மதகுருமார் விண்ணப்பதாரிகளில் 2014 ஆம் வருடம் க.பொ.த (உ.த) சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2013, 2012, 2011, 2010 ஆம் வருடங்களை தொடராகக் கருத்திற்கொண்டு க.பொ.த (உ.த) சித்தியடைந்த மதகுருமார்கள் விண்ணப்பதாரிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர்.

**4.9 பாடநெறி இலக்கம் 09 - தாய் மொழி (சிங்களம்)**

4.9.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த(உ.த) பரீட்சையில் சிங்களப் பாடத்துக்கு திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.9.2 சிங்கள மொழிக்கு திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**4.10 பாடநெறி இலக்கம் 10 - தாய் மொழி (தமிழ்)**

4.10.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் தமிழ்ப் பாடத்துக்கு திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். (ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்கின்ற தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் தமிழ் உட்பட இரண்டு (02) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானது. இதன்போது க.பொ.த (உ.த) பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் சித்தியெய்தியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.),

அத்துடன்

4.10.2 தமிழ் மொழிக்கு திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**4.11 பாடநெறி இலக்கம் 11 - ஆங்கிலம்**

4.11.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் ஆங்கில மொழி (பாட இலக்கம் - 73) உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

*க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியுடன், சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் / லண்டன் (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்,*

*4.11.2 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் எவையேனும் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,*

*அத்துடன்*

*க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில இலக்கியத்தில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியுடன் சிங்கள/ தமிழ் மொழி, ஆங்கிலம், கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்,*

*4.11.3 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் எவையேனும் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,*

*அத்துடன்*

*க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக் குறைந்தது அதிதிறமைச் சித்தியுடன் சிங்கள/தமிழ் மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த(சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

**கவனத்திற் கொள்க.-**

**தெரிவு முன்னுரிமை ஒழுங்கு முறை**

(i) *4.11.1 இன் கீழ் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள்.- இவர்கள் தெரிவு செய்யப்படுவது ஒவ்வொரு மாவட்ட மட்டத்தில்/ பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் பெறப்பட்ட* **Z** *புள்ளி ஒழுங்கு முறையிலும் மற்றும் 6.1.2 பந்திக்கு அமைவாகவும் ஆகும்.*

(ii) *4.11.2 தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள்.- இவர்கள் தெரிவு செய்யப்படுவது ஒவ்வொரு மாவட்ட மட்டத்தில்/ பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில இலக்கியத்திற்குப் பெற்ற சித்திக்கான புள்ளிகளின் ஒழுங்கு வரிசையிலும் மற்றும் 6.1.2 பந்திக்கு அமையவும் ஆகும். (இங்கு கவனத்திற் கொள்ளப்படுவது விசேட சித்தி (A), அதி திறமைச்சித்தி (B), திறமைச்சித்தி (C) மட்டுமே)*

(iii) *4.11.3 பிரிவிற்கமைய தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள்.- இவர்கள் தெரிவு செய்யப்படுவது ஒவ்வொரு மாவட்ட மட்டத்தில்/பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்திற்கு பெற்ற சித்திக்கான புள்ளிகளின் அடிப்படையிலும் மற்றும் 6.1.2 பந்திக்கு அமையவும் ஆகும். (இங்கு கவனத்திற் கொள்ளப்படுவது விசேட சித்தி (A), அதி திறமைச்சித்தி (B) மட்டுமே).*

**4.13 பாடநெறி இலக்கம் 13 - சித்திரம் (சிங்களம்)**
**சித்திரம் (தமிழ்)**

*4.13.1 2014 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்திரப் பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பித்த தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் சித்திரப் பாடம் உட்பட இரண்டு (02) பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்,*

*அத்துடன்*

*4.13.2 சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் சித்திரம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*4.13.3 4.13.1 மற்றும் 4.13.2 இல் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுள் 3.5 பந்தியில் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

**கவனத்திற் கொள்க**:

(ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2014 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் சித்திரம் உட்பட ஒரேயமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்த தோட்ட மாவட்டங்களில் வசிக்கும் தோட்டத்தொழிலாளர் அல்லாத இந்திய வம்சாவளித் தமிழ் மொழி மூலமான விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலும் வெற்றிடங்கள் காணப்படின் 2014 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட க.பொ.த(உ.த) பரீட்சையில் ஒரே தடவையில் இரண்டு பாடங்களில் சித்திபெற்ற க.பொ.த. (சா.த) பரீட்சையில் சித்திரம்/சித்திரமும் சிற்பமும் பாடத்திற்கு திறமைச்சித்தி பெற்றுள்ள விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும்.).

**4.14 பாடநெறி இலக்கம் 14 - நடனம் (கீழைத்தேயம்)**

4.14.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் நடனம் (கீழைத்தேயம்) பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.14.2 சிங்கள மொழி, கணிதம் மற்றும் நடனம் (கீழைத்தேயம்) உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்,

4.14.3 4.14.1 மற்றும் 4.14.2 இல் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுள் 3.5 பந்தியில் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**4.15 பாடநெறி இலக்கம் 15 - நடனம் (பரதம்)**

4.15.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் நடனம் (பரதம்) உட்பட மூன்று (03) பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்கின்ற தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் நடனம் (பரதம்) உட்பட இரண்டு (02) பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.15.2 தமிழ் மொழி, கணிதம் மற்றும் நடனம் (பரதம்) உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.15.3 4.15.1, 4.15.2 ஆம் பந்தியில் குறிப்பிட்டவற்றை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுள் 3.5 ஆம் பந்தியில் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**கவனத்திற் கொள்க**.-

(ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2014 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த) பரீட்சையில் நடனம் (பரதம்) உட்பட ஒரேயமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்த தோட்ட மாவட்டங்களில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர் அல்லாத இந்திய வம்சாவளித் தமிழ் மொழி மூலமான விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலும் வெற்றிடங்கள் காணப்படின் 2014 இல் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே தடவையில் இரண்டு பாடங்களில் சித்திபெற்ற க.பொ.த. (சா.த) பரீட்சையில் நடனம் (பரதம்) பாடத்திற்கு திறமைச்சித்தி பெற்றுள்ள விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும்.).

**4.16 பாடநெறி இலக்கம் 16 - சங்கீதம் (கீழைத்தேயம்)**

4.16.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் சங்கீதம் (கீழைத்தேயம்) பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.16.2 சிங்கள மொழி, கணிதம் மற்றும் சங்கீதம் (கீழைத்தேயம்) உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்,

4.16.3 4.16.1 மற்றும் 4.16.2 இல் குறிப்பிட்டவற்றை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுள் 3.5 ஆம் பந்தியில் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**4.17 பாடநெறி இலக்கம் 17 - சங்கீதம் (கர்நாடகம்)**

4.17.1 2014 ஆம் ஆண்டில் நடந்த க.பொ.த (உ.த) பரீட்சையில் சங்கீதம் (கர்நாடகம்) உட்பட மூன்று (03) பாடங்களில் (ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்கின்ற தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் சங்கீதம் (கர்நாடகம்) உட்பட இரண்டு (02) பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.17.2 க.பொ.த (சா.த) பரீட்சையில் தமிழ் மொழி, கணிதம் மற்றும் சங்கீதம் (கர்நாடகம்) உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

4.17.3 4.17.1, 4.17.2 இல் குறிப்பிட்டவற்றை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுள் 3.5 ஆம் பந்தியில் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**கவனத்திற் கொள்க.-**

(ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2014 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த) பரீட்சையில் சங்கீதம் (கர்நாடகம்) உட்பட ஒரேயமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்த தோட்ட மாவட்டங்களில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் அல்லாத இந்திய வம்சாவளித் தமிழ் மொழி மூலமான விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலும் வெற்றிடங்கள் காணப்படின் 2014 இல் நடாத்தப்பட்ட க.பொ.த(உ.த) பரீட்சையில் ஒரே தடவையில் இரண்டு (02) பாடங்களில் சித்தி பெற்ற க.பொ.த (சா.த) பரீட்சையில் சங்கீதம் (கர்நாடகம்) பாடத்தில் திறமைச்சித்தி பெற்றுள்ள விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும்.).

**4.18 பாடநெறி இலக்கம் 18 - மேற்கத்தேய சங்கீதம் (ஆங்கிலம்)**

4.18.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த(உ.த) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீதம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

ஆங்கில மொழியில் திறமைச்சித்தி / ஆங்கில இலக்கியத்திற்கு சாதாரண சித்தியுடன், சிங்களம் / தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த(சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.18.2 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியுடன், சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

கல்வியியற் கல்லூரி நிறுவக சபையினால்/ கல்விச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மேற்கத்தேய சங்கீதம் தொடர்பாக ஐந்தாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல். (அறிமுறை மற்றும் செய்முறை.).

அல்லது

4.18.3 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியுடன் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேற்கத்தேய சங்கீதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

க.பொ.த (உ.த.) பரீட்சையில் மேற்கத்தேய சங்கீதம் மேலதிக பாடமாக சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.18.4 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த(உ.த) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

மேற்கத்தேய சங்கீதத்தில் விசேட சித்தியுடன் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியத்தில் சாதாரண சித்தியுடன் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**கவனத்திற் கொள்க.-**

(i) மேற்கத்தேய சங்கீதப் பாடநெறிக்காக நடாத்தப்படும் பிரயோகப் பரீட்சையில் திருப்திகரமான திறமை மட்டத்தை பெறவேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுக்கும் போது மேற்கூறப்பட்ட 4.18.1, 4.18.2, 4.18.3, 4.18.4 இன் கீழ் தொடரொழுங்கு முறையில் முன்னுரிமை வழங்கப்படும்

**4.19 பாடநெறி இலக்கம் 19 - நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)**
**நாடகமும் அரங்கியலும் (தமிழ்)**

4.19.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த(உ.த) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

மற்றும்

4.19.2 சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், நாடகமும் அரங்கியலும்/ சங்கீதம்/ நடனம்/ சித்திரம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.19.3 4.19.1 மற்றும் 4.19.2 இல் குறிப்பிட்டவற்றை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுள் 3.5 ஆம் பந்தியில் குறிப்பிட்ட முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**கவனத்திற் கொள்க.-**

ஆட்சேர்ப்பின் போது க.பொ.த (சா.த) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் சித்தியெய்திய விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அம் மாவட்டத்திலிருந்து க.பொ.த (சா.த) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் போதியளவு எண்ணிக்கை இல்லாதுபட்சத்தில் மட்டும் க.பொ.த (சா.த) பரீட்சையில் நடனம்/சங்கீதம்/சித்திரப் பாடத்தில் சித்தியெய்திய விண்ணப்பதாரிகளைத் தேர்ந்தெடுப்பது கவனத்திற்கொள்ளப்படும்.

**4.20 பாடநெறி இலக்கம் 20 - உடற்கல்வி (சிங்களம்)**
**உடற்கல்வி (தமிழ்)**
**உடற்கல்வி (ஆங்கிலம்)**

4.20.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.20.2 சிங்களம்/ தமிழ் மொழி, சுகாதாரமும் உடற்கல்வியும் மற்றும் கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.20.3 அங்கீகரிக்கப்பட்ட தடகள மெய்வல்லுனர் விளையாட்டுக்கள், ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டுக்கள் சம்பந்தமான அடைவுகள்/திறமைகள் பெற்றிருத்தல்.

- வேறுபட்ட விளையாட்டுக்கள்/நிகழ்ச்சிகள் மூன்றுக்கு சமர்ப்பிக்கின்ற சான்றிதழ்கள் கவனத்திற்கொள்ளப்பட்டு கீழ்வரும் அட்டவணைக்கு அமைய ஆகக்கூடுதலாக 75 புள்ளிகள் வழங்கப்படும்.

**விளையாட்டு / நிகழ்ச்சி முன்னுரிமை தொடரொழுங்கு**

| தொடர் இல. | மட்டம்/விடயம் | தனி | குழு | இடம்/ தரம் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 01 | சர்வதேச மட்டம் | தனி | - | 1 | 25 |
| 02 | சர்வதேச மட்டம் | தனி | - | 2 | 24 |
| 03 | சர்வதேச மட்டம் | தனி | - | 3 | 23 |
| 04 | சர்வதேச மட்டம் | - | குழு | 1 | 22 |
| 05 | சர்வதேச மட்டம் | - | குழு | 2 | 21 |
| 06 | சர்வதேச மட்டம் | - | குழு | 3 | 20 |
| 07 | சர்வதேச தேசிய பிரதிநிதி | தனி | குழு | - | 19 |
| 08 | தேசிய மட்டம் | தனி | - | 1 | 18 |
| 09 | தேசிய மட்டம் | தனி | - | 2 | 17 |
| 10 | தேசிய மட்டம் | தனி | - | 3 | 16 |
| 11 | தேசிய மட்டம் | - | குழு | 1 | 15 |
| 12 | தேசிய மட்டம் | - | குழு | 2 | 14 |
| 13 | தேசிய மட்டம் | - | குழு | 3 | 13 |
| 14 | மாகாண மட்டம் | தனி | - | 1 | 12 |
| 15 | மாகாண மட்டம் | தனி | - | 2 | 11 |
| 16 | மாகாண மட்டம் | தனி | - | 3 | 10 |
| 17 | மாகாண மட்டம் | - | குழு | 1 | 09 |
| 18 | மாகாண மட்டம் | - | குழு | 2 | 08 |
| 19 | மாகாண மட்டம் | - | குழு | 3 | 07 |
| 20 | றெஜிமென்ட் சார்ஜன்ட் மேஜர் /அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் 1 | - | - | - | 06 |
| 21 | சனாதிபதி சாரணியமும், பெண் சாரணியமும் | - | - | - | 06 |
| 22 | சாஜன்ட் மேஜர்/ அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் 2 | - | - | - | 05 |
| 23 | மாவட்ட /வலய மட்டம் /பிரதேச செயலக மட்டம் | தனி | - | 1 | 06 |
| 24 | மாவட்ட /வலய மட்டம் /பிரதேச செயலக மட்டம் | தனி | - | 2 | 05 |
| 25 | மாவட்ட /வலய மட்டம் /பிரதேச செயலக மட்டம் | தனி | - | 3 | 04 |
| 26 | மாவட்ட /வலய மட்டம் /பிரதேச செயலக மட்டம் | - | குழு | 1 | 03 |
| 27 | மாவட்ட /வலய மட்டம் /பிரதேச செயலக மட்டம் | - | குழு | 2 | 02 |
| 28 | மாவட்ட /வலய மட்டம் /பிரதேச செயலக மட்டம் | - | குழு | 3 | 01 |

4.20.4 க.பொ.த (சா.த) பரீட்சையில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்கு தோற்றியவர் சித்தி பெற்றுக்கொண்ட தரத்தினடிப்படையில் பின்வருமாறு மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்.

A சித்தி - 05
B சித்தி - 03
C சித்தி - 02
S சித்தி - 01

**கவனத்திற் கொள்க.-**

(i) உடற்கல்வி பாடநெறிக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும்/ பிரதேச செயலாளர் பிரிவிலும் விண்ணப்பதாரர்களினது விளையாட்டு திறமை ஒழுங்கு முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். (4.20.3 பந்திக்கு இணங்க)

(ii) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி (சர்வதேச மட்டம்) - கல்வியமைச்சு/ விளையாட்டு அமைச்சு மற்றும் அவற்றில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கூடாக(சதுரங்கம், கரம், டாம் தவிர) இலங்கைத் தேசிய குழுவினை அல்லது பாடசாலை விளையாட்டுக்குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சர்வதேச மட்டத்திலான போட்டிகளில் பங்குபற்றியிருத்தல். (பாடசாலை விளையாட்டுக் குழுவில் தனிப்பட்ட ரீதியில் பங்குபற்றிய சர்வதேசப் போட்டிகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.)

(iii) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டி - கல்வியமைச்சு/விளையாட்டு அமைச்சு/ தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள்.

மாகாணக் கல்வியமைச்சு/ மாகாண விளையாட்டு அமைச்சு/தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் மாகாண மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டிகள்.

மாகாண விளையாட்டு அமைச்சு/தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் மாவட்ட மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட மாவட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள்/ மாகாண கல்வியமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கல்வி வலய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள்.

(iv) விளையாட்டு அமைச்சில் அல்லது கல்வியமைச்சில் பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களினூடாக ஒழுங்கு செய்யப்பட்ட "A" தரத்திலான போட்டிகளில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் இடங்களைப் பெற்றவர்களுக்கு மாத்திரம் அவ்வொழுங்கில் முன்னுரிமை வழங்கப்படும்.

(v) விண்ணப்பம் கோரும் இறுதித் திகதிக்கு முன்னதான ஐந்து (05) வருடங்களில் பெறப்பட்ட விளையாட்டு அடைவுகள்/திறமைகள் இதன் பொருட்டு செல்லுபடியாகும்.

(vi) விளையாட்டுச் சான்றிதழ்கள் மூன்றுக்கு புள்ளி வழங்கும் போது ஒரே நிகழ்ச்சியில் ஒரே வருடத்தில் பெறப்பட்ட சான்றிதழ்களில் அதிகூடிய ஒன்றுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.

**4.21 பாடநெறி இலக்கம் 21 - மனைப் பொருளியல் (சிங்களம்)**
**மனைப் பொருளியல் (தமிழ்)**

4.21.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் மனைப்பொருளியல் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.21.2 சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம்/ விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**4.22 பாடநெறி இலக்கம் 22 - விவசாய மற்றும் உணவுத் தொழில்நுட்பம் (சிங்களம்)**
**விவசாய மற்றும் உணவுத் தொழில்நுட்பம் (தமிழ்)**

4.22.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல் ஆகிய மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

கணிதம் மற்றும் விஞ்ஞானம் / விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் சிங்களம் / தமிழ் மொழி உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

*4.22.2 2014 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் விவசாய விஞ்ஞானம்/ விவசாய தொழில்நுட்பவியல்/ உயிரியல் வளத் தொழில்நுட்பவியல்/ உணவு தொழில்நுட்பவியல் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,*

*அத்துடன்*

*கணிதம், விஞ்ஞானம் / விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் மற்றும் விவசாயம் / விவசாயமும் உணவுத் தொழில்நுட்பவியலும் / தாவர தோட்ட பராமரிப்பு/விலங்கு பராமரிப்பு/ கடல்-உயிர் வள தொழில்நுட்பவியல்/உள்நாட்டு மீன்பிடி தொழில்நுட்பவியல்/ உணவு விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் சிங்களம் / தமிழ் மொழி உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

**கவனத்திற் கொள்க.-**

**தெரிவிற்கான முன்னுரிமை தொடரொழுங்கு-**

*(அ) 4.22.1 தகைமையும் அரச அங்கீகாரம் பெற்ற விவசாயக் கல்லூரியொன்றில் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட கால விவசாயப் பாடநெறியொன்றினைப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரிகள்.*

*(ஆ) 4.22.1 தகைமையுடைய விண்ணப்பதாரிகள்.*

*(இ) 4.22.2 தகைமையுடைய விண்ணப்பதாரிகள்.*

**4.23 பாடநெறி இலக்கம் 23 - தொழில்நுட்பக் கற்கை - கலையும் கைப்பணியும் (சிங்களம்)**
**தொழில்நுட்பக் கற்கை - கலையும் கைப்பணியும் (தமிழ்)**

*4.23.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த(உ.த) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,*

*அத்துடன்*

*4.23.2 கணிதம் மற்றும் சிங்களம்/ தமிழ் மொழி, கலையும் கைப்பணியும்/ சிற்பக்கலை உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்,*

*அத்துடன்*

*4.23.3 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி/ தேசிய தொழில் பயிலுநர் சபை/ தொழிற்பயிற்சி அதிகார சபை/ நெசவுக் கைத்தொழில் திணைக்களம்/ கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வியாபார மேம்படுத்தல் திணைக்களம் ஆகிய நிறுவனங்களினால் மற்றும் ஏனைய மத்திய அரசு அல்லது மாகாண சபையொன்றின் அமைச்சு ஒன்றின் கீழ் பரிபாலிக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்படுகின்ற அடைவு மட்டங்கள் காட்டப்பட்ட முறையான சான்றிதழுடன் கூடிய பத்து (10) மாதங்களுக்கு குறையாத குறிப்பிட்ட பாடநெறியோடு தொடர்புடைய தொழில்நுட்பக்கற்கை நெறியை பூர்த்தி செய்திருத்தல்.*

**கவனத்திற் கொள்க.-**

(i) தேர்ந்தெடுப்பதற்கான முன்னுரிமைத் தொடரொழுங்கு-

*(அ) 4.23.1, 4.23.2 மற்றும் 4.23.3 சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரிகள்.*

*(ஆ) 4.23.1 மற்றும் 4.23.2 சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரிகள்.*

*மேற்கூறப்பட்ட (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் போதியளவு ஒவ்வொரு மாவட்டத்திலும் இல்லாதவிடத்து 2013 மற்றும் 2012 ஆம் வருடங்களில் (அ) தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் தொடருக்கமைய கவனத்திற் கொள்ளப்படும். அதற்கு மேலதிகமாகவும் வெற்றிடங்கள் காணப்பட்டால் மாத்திரம் மேலே (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகள் 2014, 2013, 2012 இல் தகைமை பெற்றவர்கள் முன்னுரிமை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளல் கவனத்திற் கொள்ளப்படும்.*

(ii) விண்ணப்பப்பத்திரத்தில் 16.1 இன் கீழ் விண்ணப்பிக்கும் பாடநெறி கலையும் கைப்பணியும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட சகல தகைமைகளும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| **4.24 பாடநெறி இலக்கம்** | **24 - A வடிவமைப்பும் கட்டிடத்தொழில்நுட்பமும் (சிங்களம்)**<br>**24 - B வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பமும் (சிங்களம்)**<br>**24 - C வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில்நுட்பமும் (சிங்களம்)**<br>**24 - A வடிவமைப்பும் கட்டிடத்தொழில்நுட்பமும் (தமிழ்)**<br>**24 - B வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பமும் (தமிழ்)**<br>**24 - C வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில்நுட்பமும் (தமிழ்)** |

4.24.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் வன்பொருள் தொழில்நுட்பவியல் பாடப் பிரிவில் குடிசார் தொழில்நுட்பவியல், பொறிமுறைத் தொழில்நுட்பவியல், மின் இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்று உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அல்லது

4.24.2 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.24.3 கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழியுடன், நிர்மாணத் தொழில்நுட்பம்/இயந்திரத் தொழில்நுட்பம்/ மின்சாரம் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம்/ஆக்கத்திறனும் தொழில்நுட்பவியலும் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்று உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த(சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.24.4 அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி/தேசிய தொழில் பயிலுநர் சபை/ தொழிற்பயிற்சி அதிகார சபை/ கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வியாபார மேம்படுத்தல் திணைக்களம்/ஏனைய மத்திய அரசு அல்லது மாகாண சபையொன்றின் அமைச்சு ஒன்றின் கீழ் பரிபாலிக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்படுகின்ற அடைவு மட்டங்கள் குறிக்கப்பட்ட முறையான சான்றிதழ் வழங்கக்கூடிய பத்து (10) மாதங்களுக்கு குறையாத குறிப்பிட்ட பாடநெறியோடு தொடர்புடைய தொழில்நுட்பக்கற்கை நெறியை பூர்த்தி செய்திருத்தல்.

**கவனத்திற் கொள்க:**

(i) தேர்ந்தெடுப்பதற்கான முன்னுரிமைத் தொடர்-

(அ) 4.24.1, 4.24.3 மற்றும் 4.24.4 ஆகிய சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரிகள்.

(ஆ) 4.24.2, 4.24.3 மற்றும் 4.24.4 ஆகிய சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரிகள்.

அவ்வாறிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட (அ), (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் போதியளவு இல்லாதவிடத்து 2013 மற்றும் 2012 ஆம் வருடங்களில் (அ) அல்லது (ஆ) தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் தொடரொழுங்கில் கவனத்திற் கொள்ளப்படுவார்கள்.

(ii) விண்ணப்பப்பத்திரத்தில் 16.1 இன் கீழ் விண்ணப்பிக்கும் பாடநெறி வடிவமைப்பும் கட்டிடத் தொழில்நுட்பமும் / வடிவமைப்பும் பொறியியல் தொழில்நுட்பமும் / வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில்நுட்பமும் எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட சகல தகைமைகளும் பெற்றிருத்தல் வேண்டும்.

**4.25 பாடநெறி இலக்கம் 25 - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ஆங்கிலம்)**

*4.25.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச்சித்தி உட்பட மூன்று (03) பாடங்களில் (தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடம் உட்பட இரண்டு (02) பாடங்களில்) சித்தி பெற்றிருத்தல்,*

*அத்துடன்*

*ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தி மற்றும் கணித பாடத்தில் திறமைச் சித்தியுடன் சிங்களம் / தமிழ் மொழி உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த(சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*(தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் கணித பாடத்தில் திறமைச் சித்தியுடன் சிங்களம்/ தமிழ் மொழி மற்றும் ஆங்கில மொழி பாடம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்).*

*4.25.2 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடம் உட்பட மூன்று (03) பாடங்களில் (தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடம் உட்பட இரண்டு (02) பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்,*

*அத்துடன்*

*ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு குறைந்தபட்சம் திறமைச் சித்தியுடன் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த(சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*(தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் ஆங்கில மொழிப் பாடம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், சிங்களம் / தமிழ் மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த(சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்).*

*4.25.3 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த(உ.த) பரீட்சையில் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் மூன்று (03) பாடங்களில் (தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் இரண்டு (02) பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்,*

*அத்துடன்*

*ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி /ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு குறைந்தபட்சம் அதி திறமைச்சித்தியுடன் (B) சிங்களம் / தமிழ் மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த(சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*(தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் ஆங்கில மொழிப் பாடம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்).*

*4.25.4 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த(உ.த) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் மூன்று (03) பாடங்களில் (தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் இரண்டு (02) பாடங்களில்) சித்தியடைந்திருத்தல்,*

*அத்துடன்*

*ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி/ ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்திற்கு குறைந்தபட்சம் அதி திறமைச்சித்தியுடன் (B) சிங்களம் / தமிழ் மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

(தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் ஆங்கில மொழிப் பாடம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த(சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்).

4.25.5 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த(உ.த) பரீட்சையில் கலைப் பிரிவில் அல்லது வணிகப்பிரிவில் மூன்று (03) பாடங்களில் (தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் கலை அல்லது வணிகப்பிரிவில் இரண்டு (02) பாடங்களில்) சித்தி பெற்றிருத்தல்,

அத்துடன்

ஆங்கில மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி / ஆங்கில இலக்கியப் பாடத்தில் சாதாரண சித்தி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு குறைந்தபட்சம் விசேட சித்தியுடன் (A) சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த(சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டும் ஆங்கிலப் பாடம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த(சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்).

● தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடநெறிக்கு தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் தெரிவு ஏனைய பாடநெறிகளுக்குத் தெரிவு செய்யப்படும் முறையில் அமைந்தாலும் அவர்களுக்கான இப்பாடநெறி நடாத்தப்படுவது றுவன்புர தேசிய கல்வியியற் கல்லூரியிலாகும்.

**கவனத்திற் கொள்க.-**

***தெரிவிற்கான முன்னுரிமை ஒழுங்குமுறை-***

(ஒவ்வொரு மாவட்டத்தில் / பிரதேச செயலாளர் பிரிவில் பெறப்பட்ட Z புள்ளிகளின் ஒழுங்குமுறையில் மற்றும் 6.1.2 பந்திக்கமைவாக).

(i) 4.25.1 இன் கீழ் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள்.
(ii) 4.25.2 இன் கீழ் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள்.
(iii) 4.25.3 இன் கீழ் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள்.
(iv) 4.25.4 இன் கீழ் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள்.
(v) 4.25.5 இன் கீழ் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள்.

**4.30 பாடநெறி இலக்கம் 30 - இரண்டாம் மொழி (சிங்களம்)**

4.30.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த(உ.த) பரீட்சையில் சிங்கள மொழியில் திறமைச் சித்தி உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.30.2 க.பொ.த(சா.த) பரீட்சையில் சிங்கள மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**கவனத்திற் கொள்க.-**

இப்பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளும்போது க.பொ.த(சா.த) பரீட்சையில் இரண்டாம் மொழி (தமிழ்) பாடம் அல்லது அரசகரும மொழித் திணைக்களத்தின் இரண்டாம் மொழி (தமிழ்) உயர் பாடநெறி அல்லது விருப்பத்திற்குரிய தமிழ் பாடத்தில் சித்தியடைந்த தொடரொழுங்குக்கமைய முன்னுரிமை வழங்கப்படும்.

**4.31 பாடநெறி இலக்கம் 31 - இரண்டாம் மொழி (தமிழ்)**

4.31.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த(உ.த) பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடன் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.31.2 க.பொ.த(சா.த) பரீட்சையில் தமிழ் மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**கவனத்திற் கொள்க.-**

இப்பாடநெறிக்கு சேர்த்துக்கொள்ளும் போது க.பொ.த(சா.த) பரீட்சையில் இரண்டாம் மொழி (சிங்களம்) பாடத்தில் சித்தியடைந்திருத்தல் அல்லது அரசகரும மொழிகள் திணைக்களத்தில் இரண்டாம் மொழி (சிங்களம்) உயர் பாடநெறியில் சித்தியடைந்த அல்லது விருப்பத்திற்குரிய சிங்களப் பாடத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு தொடரொழுங்குக்கமைய முன்னுரிமை வழங்கப்படும்.

**4.32 பாடநெறி இலக்கம் 32 - விசேட கல்வி (சிங்களம்)**
**விசேட கல்வி (தமிழ்)**

4.32.1 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ.த) பரீட்சையில் எவையேனும் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்,

அத்துடன்

4.32.2 சிங்களம் / தமிழ் மொழி, கணிதம் உட்பட பிரதான ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**கவனத்திற் கொள்க :**

இப்பாடநெறிக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பாடநெறியைப் பூர்த்தி செய்த பின்னர் விசேட கல்வித் தேவைகளுடைய செவிடர், குருடர், மந்தப்புத்தி, ஒடிசம், கற்றல் குறைபாடுகள், பல்வேறு பலவீனங்கள் போன்ற மாணவர்களுக்கு ஆசிரியர்களாக நியமனம் வழங்குவது கவனத்திற் கொள்ளப்படும். எனவே, மேற் கூறப்பட்ட விசேட கல்வித் தேவைகளுடைய மாணவர்கள் காணப்படுகின்ற அலகுகளில் சேவையாற்றுவதற்கு இணங்கி உடன்படிக்கை செய்ய விரும்பும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் இந்தப் பாடநெறிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

அத்துடன் இந்த பாடநெறி விசேட தேவைகளுடைய மாணவர்களுக்கு சேவை செய்யும் பொருட்டாகும். அத்தகைய மாணவர்களுக்கு உதவும் வகையில் மனத்தைரியமும் உடல் ஆரோக்கியமும் இல்லாத விண்ணப்பதாரர்கள் இப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

**விசேட கவனத்திற் கொள்க:**

கீழே கொடுக்கப்பட்ட விடயங்கள் 2017 ஆம் வருடத்துக்கோ அல்லது அதற்கு பின் வருகின்ற வருடங்களிலோ சேர்த்துக்கொள்ளுதல் சம்பந்தமாக உங்களது முன் அறிவித்தலுக்காக தரப்படுகின்றன.

- ***2015 ஆம் வருட க.பொ.த (உ.த) கலைத்திட்ட திருத்தங்களுக்கமைவாக 2017 ஆம் வருடத்திற்கு தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை உள்வாங்கும் பொருட்டு மேலே குறிப்பிட்ட பாடநெறிகளுக்காக மாணவர்களை உள்வாங்குவதற்கான தகைமைகள் திருத்தியமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.***

- ***2015 ஆம் வருட க.பொ.த (உ.த) பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 2017 ஆம் வருடத்திற்கு தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு பௌத்த சமய மாணவர்களை தெரிவு செய்யும் போது பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகங்களில் ஒரு வருட டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பது கவனத்தில் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.***

- ***2017 ஆம் வருடத்திற்காக 2015 க.பொ.த (உ.த) பெறுபேற்று அடிப்படையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு கத்தோலிக்க/ கிறிஸ்தவ பாட நெறிக்கு தெரிவு செய்யும் போது 4.8.2 இன் கீழ் காட்டப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக அக்குவனாஸ் உயர் கல்வி நிறுவகத்தில் சமயக்கல்வி பாடநெறிச் சான்றிதழ் மற்றும் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தால் நடாத்தப்படும் கத்தோலிக்க அறநெறிப் பாடசாலைச் சான்றிதழ் கவனத்திற் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.***
- ***2018 ஆம் வருடத்திற்காக 2016 க.பொ.த (உ.த) பரீட்சை பெறுபேற்று அடிப்படையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடநெறிக்கு தெரிவு செய்யும் போது 12 ஆம் தரத்தில் பொதுத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடப் (GIT) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதும் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்காக (NVQ- தேசிய தொழிற் தகைமை) 03 வது மட்டத்திற்குரிய சான்றிதழைப் பெற்றிருப்பது கவனத்திற் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.***

5.0 ***பாடநெறி இலக்கம், பாடநெறியின் பெயர், மொழி மூலத்திற்கு அமைய ஒவ்வொரு பாடநெறியும் நடைபெறும் தேசிய கல்வியியற் கல்லூரிகள் அவற்றின் இலக்கத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.***

*தயவு செய்து இப்பட்டியலை நன்கு வாசிக்கவும். நேர்முகப்பரீட்சையின் போது ஒவ்வொரு பாடநெறிக்கும் உரிய கணினிப் பட்டியலை தயாரிக்கும் போது தங்களது விண்ணப்பம் கணினிப்படுத்தப்படுவது பாடநெறி இலக்கத்திற்கு அமையவே. சரியான தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கல்வி அமைச்சிலுள்ள கல்வியியற் கல்லூரிச் சபைக்கு கிடைக்கப்பெற்ற பின்பு அதில் எவ்வித மாற்றங்களும் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. அவ்வாறு இருந்த போதிலும் எந்தப் பாடநெறிக்கும் கல்வியியற் கல்லூரிக்குள் அனுமதித்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுப்பது கல்வியியற் கல்லூரி சபைக்கு / கல்விச் செயலாளருக்கு உரித்தாகும்.*

(i) *நிரல் – பாடநெறி இலக்கம்*
(ii) *நிரல் – பாடநெறியின் பெயர்*
(iii) *நிரல் – சிங்கள மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள்*
(iv) *நிரல் – தமிழ் மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள்*
(v) *நிரல் – ஆங்கில மொழிமூலம் நடாத்தப்படும் கற்கைநெறியுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள்.*

*(தேசிய கல்வியியற் கல்லூரிகளின் இலக்கங்கள், அவற்றின் பெயர்களின் முன் அடைப்புக்குள் தரப்பட்டுள்ளன.)*

| பாட இல. | பாடநெறி | மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியற் கல்லூரிகள், அவற்றின் இலக்கங்கள் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
| I | II | III | IV | V |
| 01 | ஆரம்பக்கல்வி | (1) ஊவா | (6) வவுனியா | |
| | | (2) நில்வளா | (7) ஸ்ரீபாத | |
| | | (3) மகாவலி | (8) அட்டாளைச்சேனை | |
| | | (4) சாரிபுத்த(தம்பதெனிய) | (9) மட்டக்களப்பு | |
| | | (7) ஸ்ரீபாத | (15) யாழ்ப்பாணம் | |
| | | (10) பஸ்துன்ரட்ட | (16) தர்காநகர் | |
| | | (11) புலதிஸிபுர | | |
| | | (12) வயம்ப | | |
| | | (13) ருவன்புர | | |
| | | (14) ருகுண | | |
| | | (17) ஹாபிடிகம | | |
| | | (19) மஹரகம | | |
| 02 | விஞ்ஞானம் | (2) நில்வளா | (6) வவுனியா | (2) நில்வளா |
| | | (5) சியனை | (7) ஸ்ரீபாத | (5) சியனை |
| | | (7) ஸ்ரீபாத | (8) அட்டாளைச்சேனை | (15) யாழ்ப்பாணம் |
| | | | (9) மட்டக்களப்பு | |
| | | | (15) யாழ்ப்பாணம் | |

| பாட இல. | பாடநெறி | மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியற் கல்லூரிகள், அவற்றின் இலக்கங்கள் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
| I | II | III | IV | V |
| 03 | கணிதம் | (2) நில்வளா | (6) வவுனியா | (2) நில்வளா |
| | | (5) சியனை | (7) ஸ்ரீபாத | (5) சியனை |
| | | (7) ஸ்ரீபாத | (8) அட்டாளைச்சேனை | (15) யாழ்ப்பாணம் |
| | | (10) பஸ்துன்ரட்ட | (15) யாழ்ப்பாணம் | |
| 04 | சமூக விஞ்ஞானம் | | (7) ஸ்ரீபாத | |
| 05 | பௌத்த சமயம் | (4) சாரிபுத்த /தம்பதெனிய | | |
| 06 | இந்து சமயம் | | (6) வவுனியா | |
| 07 | இஸ்லாம் | | (8) அட்டாளைச்சேனை | |
| 08 | கத்தோலிக்க சமயம்/ கிறிஸ்தவ சமயம் | (12) வயம்ப | (6) வவுனியா | |
| 09 | முதலாம் மொழி (சிங்களம்) | (12) வயம்ப | | |
| | | (18) பேராதெனிய | | |
| 10 | முதலாம் மொழி (தமிழ்) | | (7) ஸ்ரீபாத | |
| | | | (16) தர்காநகர் | |
| | | | (18) பேராதெனிய | |
| 11 | ஆங்கிலம் | | | (3) மகாவலி |
| | | | | (10) பஸ்துன்ரட்ட |
| | | | | (15) யாழ்ப்பாணம் |
| | | | | (18) பேராதெனிய |
| 13 | சித்திரம் | (3) மகாவலி | (7) ஸ்ரீபாத | |
| | | (12) வயம்ப | (9) மட்டக்களப்பு | |
| | | | (15) யாழ்ப்பாணம் | |
| 14 | நடனம் (கீழைத்தேயம்) | (3) மகாவலி | | |
| | | (12) வயம்ப | | |
| 15 | நடனம் (பரதம்) | | (7) ஸ்ரீபாத | |
| | | | (15) யாழ்ப்பாணம் | |
| 16 | சங்கீதம் (கீழைத்தேயம்) | (3) மகாவலி | | |
| | | (12) வயம்ப | | |
| 17 | சங்கீதம் (கர்நாடகம்) | | (7) ஸ்ரீபாத | |
| | | | (15) யாழ்ப்பாணம் | |
| 18 | மேற்கத்தேய சங்கீதம் | | | (3) மகாவலி |
| 19 | நாடகமும் அரங்கியலும் | (3) மகாவலி | (9) மட்டக்களப்பு | |
| | | (12) வயம்ப | | |
| 20 | உடற்கல்வி | (1) ஊவா | (6) வவுனியா | (1) ஊவா |
| | | (2) நில்வளா | (9) மட்டக்களப்பு | |
| | | (14) றுகுண | | |
| 21 | மனைப் பொருளியல் | (14) றுகுண | (6) வவுனியா | |
| | | | (16) தர்காநகர் | |
| 22 | விவசாய மற்றும் உணவுத் தொழில்நுட்பம் | (11) புலதிஸிபுர | (6) வவுனியா | |
| 23 | தொழில் நுட்பக் கற்கை – கலையும் கைப்பணியும் | (5) சியனை | (9) மட்டக்களப்பு | |

| *பாட இல.* | *பாடநெறி* | *மொழிமூல அடிப்படையில் பாடநெறிகள் நடைபெறும் கல்வியியற் கல்லூரிகள், அவற்றின் இலக்கங்கள்* | | |
|---|---|---|---|---|
| | | *சிங்கள மொழிமூலம்* | *தமிழ் மொழிமூலம்* | *ஆங்கில மொழிமூலம்* |
| I | II | III | IV | V |
| 24 | வடிவமைப்பும் கட்டிடத் தொழில் நுட்பவியலும் வடிவமைப்பும் பொறியியல் தொழில் நுட்பவியலும் / வடிவமைப்பும் மின் இலத்திரனியல் தொழில் நுட்பவியலும் | (5) சியனை | (9) மட்டக்களப்பு | |
| 25 | தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் | | | (13) றுவன்புர |
| | | | | (19) மஹரகம |
| 30 | இரண்டாம் மொழி (சிங்களம்) | (3) மகாவலி | | |
| 31 | இரண்டாம் மொழி (தமிழ்) | | (3) மகாவலி | |
| 32 | விசேட கல்வி | (17) ஹாபிடிகம | (8) அட்டாளைச்சேனை | |
| | | (19) மஹரகம | (15) யாழ்ப்பாணம் | |

**கவனத்திற் கொள்க:**

- தமிழ் மொழி மூலம் பாடநெறி நடாத்தப்படுகின்ற தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு பெண்விண்ணப்பதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

### 6.0 2016 ஆம் ஆண்டிற்கு ஆசிரிய மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒழுங்குமுறைமை

#### 6.1 தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படை :

6.1.1 2019 ஆம் வருடத்தில் ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுச் செல்வதினால் பாடசாலைத் தொகுதியில் ஏற்படும் வெற்றிட எண்ணிக்கை மற்றும் தற்போது நிலவும் ஆசிரிய பற்றாக்குறை மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் பாட பல்வகைமையை ஏற்படுத்துவதற்கான தேவை தொடர்பாக கவனத்திற் கொண்டு பாட அடிப்படையில் ஆசிரியர் தேவையைக் கணக்கிட்டு 2016 ஆம் வருடத்தில் ஒவ்வொரு பாட நெறிக்கும் இருக்கின்ற இடவசதி அளவோடு பொருந்துமாறு உள்ளெடுக்கப்படும் ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, புத்தளம், அநுராதபுரம், பொலநறுவை, பதுளை, மொனறாகலை மற்றும் இரத்தினபுரி ஆகிய கஷ்டப் பிரதேச மாவட்டங்களில் ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலம் முதலிய பாடநெறிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படும் முழு எண்ணிக்கையில் அதிக சதவீதம் ஒதுக்கப்படும்.

பாடசாலைத் தொகுதிக்குள் பாட அடிப்படையில் பாரிய வெற்றிட எண்ணிக்கை நிலவி இருந்தாலும் சேர்த்துக்கொள்ளப்படும் தொகையினர் தொடர்பாக செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக அமைவது கல்வியியற் கல்லூரிகளில் ஒவ்வொரு பாடநெறிக்கும் வசதிகள் வழங்கப்படக்கூடிய எண்ணிக்கையாகும்.

6.1.1.1 அதன்படி 2016 ஆம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக கீழ்க்காணும் இரண்டு அடிப்படைகள் பின்பற்றப்படும் :

(i) யாதும் ஒரு பாட நெறிக்குரிய சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை ஐம்பது (50) அல்லது அதற்கு குறைவாக இருப்பின் அதன்போது நாட்டிலுள்ள இருபத்தைந்து மாவட்டங்கள் அல்லது உரிய மொழிமூலத்தால் பாடத்தைக் கற்பிக்கும் மாவட்டங்களை தழுவுமாறு மாவட்ட அடிப்படையில் உயர் தகைமையைக் கொண்ட விண்ணப்பதாரிகளின் Z புள்ளி கருத்திற் கொண்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

(ii) யாதும் ஒரு பாட நெறிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை ஐம்பதுக்கு (50) அதிகமாயின் அதில் 50**%** பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையிலும் எஞ்சிய 50**%** மாவட்ட அடிப்படையிலும் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

(ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை ஐம்பது (50) அல்லது அதற்கு குறைவாக பாடநெறிக்காக பெருந்தோட்டப் பாடசாலைகள் அமைந்துள்ள மாவட்டங்களில் வாழ்ந்து உயர் தகைமையுடைய விண்ணப்பதாரிகளின் Z புள்ளி கருத்திற் கொண்டு தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அக் கல்லூரிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை ஐம்பதுக்கு (50) கூடுதலாக வரும் பாடநெறிக்கு 50**%** பெருந்தோட்ட பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவுகள் அடிப்படையிலும் எஞ்சிய 50**%** உரிய பெருந்தோட்ட மாவட்ட அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவார்கள்).

*6.1.1.2* கத்தோலிக்க/ கிறிஸ்தவ சமயம் (சிங்கள மொழி மூல) பாடநெறி மற்றும் உடற்கல்வி பாடநெறி தவிர்ந்த ஏனைய பாட நெறிகளுக்குத் தெரிவு செய்யப்படும் அடிப்படையானது *6.1.1.1* இல் குறிப்பிடப்பட்ட சேர்த்துக்கொள்ளப்படும் அடிப்படைக்கு உரியதாக **Z** புள்ளி தொடரொழுங்கிலாகும்.

Z புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படும் பாடநெறிகளில் உரிய மாவட்டத்தில்/ பிரதேச செயலாளர் பிரிவில் ஒரே Z புள்ளியில் பல மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒருவரை மாத்திரம் தேர்ந்தெடுக்க வேண்டிவரும் போது / *4.11.2* அல்லது *4.11.3* இல் குறிப்பிடப்பட்டுள்ள முறைமைக்கமைய விண்ணப்பதாரிகள் இருவரோ அல்லது அதற்கு கூடுதலானவர்களின் புள்ளிகள் சமமாக இருப்பின்/ விளையாட்டுத் திறமையடிப்படையில் ஒரே புள்ளியில் பல மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் ஒருவரை மாத்திரம் தேர்ந்தெடுக்க வேண்டிவரும் போது, முதற் தடவையாக க.பொ.த (சா.த) பரீட்சையில் பெற்றுக் கொண்ட பெறுபேறு கருத்திற் கொள்ளப்படும். அதற்கமைய விசேட சித்திக்கு 04 புள்ளிகளும், அதி திறமைச்சித்திக்கு 03 புள்ளிகளும், திறமைச்சித்திக்கு 02 புள்ளிகளும், சாதாரண சித்திக்கு 01 புள்ளி வீதமும் புள்ளிகள் வழங்கப்பட்டு மொத்த புள்ளிகளின் எண்ணிக்கையை கருத்திற் கொண்டு உரிய வெற்றிட எண்ணிக்கை நிரப்பப்படும். இப்புள்ளிகள் வழங்கும் முறை பிரதான 08 பாடங்களுக்கு மாத்திரம் (பந்தி 3.2 இல் குறிப்பிட்டவாறு) வரையறுக்கப்பட்டுள்ளது. *4.11.2* அல்லது *4.11.3* இல் குறிப்பிட்டுள்ளதற்கமைய /விளையாட்டுத் திறமையின் பொருட்டு க.பொ.த (சா.த) இல் பெற்றுக் கொண்ட புள்ளிகளும் சமமாக காணப்படும் சந்தர்ப்பத்தில் *6.1.1.1* இல் குறிப்பிடப்பட்ட சேர்த்துக்கொள்ளப்படும் அடிப்படைக்கு அமைவாக Z புள்ளி முன்னுரிமை ஒழுங்கில் தெரிவு மேற்கொள்ளப்படும்.

*6.1.3* உடற்கல்வி, நடனம் (கீழைத்தேயம்), நடனம்(பரதம்), சங்கீதம் (கீழைத்தேயம்), சங்கீதம் (கர்நாடகம்) மற்றும் மேற்கத்தேய சங்கீதம் ஆகிய பாடநெறிக்காக நடாத்தப்படும் பிரயோகப் பரீட்சையில் *6.1.1.1* இல் குறிப்பிட்ட உள்வாங்கும் அடிப்படையில் தகைமை தொடர்பாக திருப்திகரமான தேர்ச்சி மட்டத்தை அடைய வேண்டும்.

*6.1.4*

*6.1.4.1* அந்த அந்த பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தல் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் போதுமான எண்ணிக்கை இல்லாத பட்சத்தில் மாவட்ட மட்ட தகைமை அல்லாதுவிடின் மாகாண மட்ட தகைமை தொடரொழுங்கு கவனத்திற் கொள்ளப்பட்டு தெரிவு மேற்கொள்ளப்படும்.

*6.1.4.2* மாவட்ட மட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படும் போது தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் போதுமான எண்ணிக்கை இல்லாத பட்சத்தில் மாகாண மட்ட தகைமை கவனத்திற் கொள்ளப்பட்டு தெரிவு மேற்கொள்ளப்படும்.

### *6.2* நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தல்

*6.2.1* பிரதேச செயலாளர் பிரிவின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும் போது விண்ணப்பதாரி, விண்ணப்பிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு என்பது அவர் முதன் முறையாக க.பொ.த (உ.த) பரீட்சையில் தோற்றிய வருடத்துடன் முன்னைய இரண்டு (02) வருடங்கள் வரை நிரந்தரமாக வசித்த பிரதேச செயலாளர் பிரிவாகும்.

6.2.2 மாவட்ட அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும் போது விண்ணப்பதாரி, விண்ணப்பிக்கும் மாவட்டம் என்பது அவர் முதன்முறையாக க.பொ.த (உ.த) பரீட்சையில் தோற்றிய வருடத்துடன் முன்னைய இரண்டு (02) வருடங்கள் வரை நிரந்தரமாக வசித்த மாவட்டமாகும்.

* மாகாண மட்ட தகைமை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது முதன்முறையாக க.பொ.த (உ.த) பரீட்சையில் தோற்றிய வருடத்துடன் முன்னைய இரண்டு (02) வருடங்கள் வரை அவர் நிரந்தரமாக வசித்த மாகாணம் விண்ணப்பதாரியின் மாகாணமாக கொள்ளப்படும்.

* சேர்த்துக்கொள்ளப்படும் நிபந்தனைக்கு அமைவாக விண்ணப்பதாரியினால் நிரந்தர வதிவிடம் உறுதிப்படுத்தப்பட்ட வாக்காளர் பெயர்ப் பட்டியல் பிரதியூடாக உறுதி செய்ய வேண்டும்.

* ஏதாவது காரணத்தால் மூன்று (03) வருடங்கள் அல்லது சில வருடங்களுக்கு உரிய வாக்காளர் பதிவூடாக வதிவிடத்தை உறுதிப்படுத்த முடியாத சந்தர்ப்பத்தில் பதிவு செய்ய முடியாமைக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணத்தை கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவிட மற்றும் நடத்தை சம்பந்தமான சான்றிதழ் (DS 04) "வேறு காரணங்கள்" என்பதன் கீழ் நிரந்தர வதிவிட பிரதேசத்தின் கிராம அலுவலகர் கையொப்பத்துடன் பிரதேச செயலாளரின் இணை ஒப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

* விண்ணப்பதாரியின் வயது பூரணமாகாத காரணத்தால் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பதிவு செய்யப்பட முடியாத வருடங்களுக்காக பெற்றோரின் பெயர்கள் உள்ளடங்கிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் பதிவூடாக வதிவிடம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

* யாதுமொரு காரணத்தினால் பெற்றோர்கள் அல்லாது வேறு பாதுகாவலரின் கீழ் உரிய காலப் பகுதியில் நிரந்தரமாக வதிவிடத்தைக் கொண்ட விண்ணப்பதாரி அந்தப் பாதுகாப்பிலிருந்த காலப்பகுதியோடு கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவிட மற்றும் நடத்தை தொடர்பான சான்றிதழ் (DS 04) "வேறு காரணங்கள்" என்னும் பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரியின் வாக்கு இல்லாத வருடத்திற்காக பாதுகாவலரின் வாக்காளர் பெயர்ப்பட்டியல் ஊடாக வதிவிடத்தை உறுதி செய்ய வேண்டும்.

* ஒரு வருடத்திற்கோ அல்லது இரண்டு வருடங்களுக்கோ மட்டும் உரிய வாக்காளர் இடாப்பின் பதிவு முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் எஞ்சிய வருடங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஆவணங்களினால் வதிவிடம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். (உதாரணம்: கிராம அலுவலர் சான்றிதழ், ஆட்பதிவு திணைக்களத்தின் தேசிய அடையாள அட்டையின் முகவரி)

6.2.3 மேற்கூறிய 6.2.1 / 6.2.2 இன் கீழ் அல்லது மாகாண வதிவிடம் உறுதி செய்ய முடியாத விண்ணப்பதாரிகளுக்கு அவர் முதற் தடைவையாக க.பொ.த.(உ.த) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை/ பரீட்சை நிலையத்துக்குரிய பிரதேச செயலாளர் பிரிவு/ மாவட்டம்/ மாகாணம் அவர்களுக்குரிய பிரதேச செயலாளர் பிரிவு/மாவட்டம்/மாகாணம் ஆகக் கருத்திற் கொள்ளப்படும்.

6.3 **ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்குத் தேர்ந்தெடுத்தல்**

6.3.1 வெற்றிட எண்ணிக்கையில் 75% இந்திய வம்சாவளி தமிழ் விண்ணப்பதாரர்களும் 25% சிங்கள மொழிமூல விண்ணப்பதாரர்கள் மூலமும் நிரப்பப்படும்.

6.3.1.1 பெருந்தோட்டப் பாடசாலைகள் அமைந்துள்ள மாவட்டத்தில்/மாவட்டத்திற்குரிய பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரிகளின் 35% மொனராகலை, பதுளை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு/ மாவட்டங்களுக்குரிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

6.3.2

6.3.2.1 ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்க வேண்டியது நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தறை, காலி மற்றும் குருநாகல் ஆகிய பெருந்தோட்ட மாவட்டங்களில்/மாவட்டத்திற்குரிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் வதியும் பெருந்தோட்டத்துறையில் சேவையாற்றுபவர்களின் பிள்ளைகள் மாத்திரம் ஆகும். சமகாலத்தே பெருந்தோட்டங்களில் சேவைபுரிகின்றவர்களின் பிள்ளைகளுக்கும் தற்போது தோட்டங்களில் வசிக்கும் பெருந்தோட்ட துறையில் 25 வருடங்கள் சேவையாற்றிய பின் 2005 - 2014 வருட காலப்பகுதியில் ஓய்வு பெற்ற அல்லது சுகயீனம் காரணமாக சேவையிலிருந்து விலகிய அல்லது இறந்தவர்களின் பிள்ளைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

6.3.2.2 6.3.2.1 இல் குறிப்பிட்ட விண்ணப்பதாரிகள் போதியளவில் காணப்படாவிடில் பெருந்தோட்டப்பகுதிகளில் தற்போது சேவைபுரியாவிடினும் 2005 அல்லது அதற்குப் பின்னருள்ள வருடங்களில் பெருந்தோட்டப்பகுதிகளில் குறைந்தபட்சம் ஐந்து (05), நான்கு(04), மூன்று (03) வருடங்கள் தொடர்ந்து சேவை புரிந்தோரின் பிள்ளைகள் தொடர்பாக கருத்திற்கொள்ளப்படும். (முன்னுரிமை வழங்கப்படுவது 2014, 2013, 2012 ஆகிய வருடங்களின் ஒழுங்குமுறையில்).

6.3.2.3 ஏதாவது தமிழ் மொழிமூல பாடநெறியொன்றுக்கு மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரிகளில் தகைமை பெறுகின்ற போதியளவான எண்ணிக்கை இல்லாது இருப்பின் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில்/மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலாளர் பிரிவில் வதிகின்ற தோட்டப்பகுதிகளில் வேலை செய்யாத இந்திய வம்சாவளி விண்ணப்பதாரிகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படும்.

6.3.2.4 அதற்கேற்ப, போதியளவான எண்ணிக்கை இல்லாது இருப்பின் வேறு மாவட்டங்களில் / வேறு மாவட்டங்களின் பிரதேச செயலாளர் பிரிவில் வதிகின்ற இந்திய வம்சாவளி தமிழ் மொழிமூல விண்ணப்பதாரர்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படும்.

6.3.2.5 பெருந்தோட்டதுறையில் வேலை செய்யாத பெருந்தோட்ட மாவட்டங்களில் / அந்த மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் வதிகின்ற இந்திய வம்சாவளி தமிழ் மொழிமூல விண்ணப்பதாரிகள் மற்றும் வேறு மாவட்டங்களில் / அந்த மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் வதிகின்ற இந்திய வம்சாவளி தமிழ் மொழிமூல விண்ணப்பதாரிகள் க.பொ.த (உ.த) பரீட்சையில் உரிய மூன்று (03) பாடங்களில் கட்டாயமாக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

6.3.2.6 சிங்கள மொழிமூல பாடநெறிகளுக்கு பெருந்தோட்டம் அமைந்துள்ள மாவட்டத்தில் / அம்மாவட்டத்திற்குரிய பிரதேச செயலாளர் பிரிவில் வதிந்துள்ள பெரும்தோட்டப்பகுதி வதிவாளர்களின் பிள்ளைகள் போதியளவான எண்ணிக்கை இல்லையென்றால் மீதமுள்ள வெற்றிடங்களை ஸ்ரீபாத/ஏனைய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அந்தப் பாடநெறிகளுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து அவர்களின் Z புள்ளியின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படுவர்.

6.3.3 நேர்முகப்பரீட்சையின்போது அரச மற்றும் பதிவு செய்யப்பட்ட தனியார் தோட்ட கம்பனிகளின் ஊழியர்களின் பிள்ளைகள் அதனை உறுதி செய்வதற்காக கீழ்க்காணும் ஆவணங்களில் தமக்குரிய ஆவணங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

- தற்போது பெருந்தோட்டங்களில் சேவையில் இருக்கும் தோட்டங்களில் சேவை செய்கின்றார்கள் எனவும் (அந்தக் காலப்பகுதியை குறிப்பிட்டு) மற்றும் நிரந்தரமாக தோட்டங்களில் வதிவது தொடர்பாக தோட்ட அதிகாரியால் உறுதிப்படுத்திய கடிதம்.

- இருபத்தைந்து (25) வருடங்கள் சேவையின் பின் 2005 – 2014 காலப் பகுதியில், சுகயீனம் காரணமாக பெருந்தோட்ட சேவையில் இருந்து விலகிக் கொண்ட/ஓய்வு பெற்றுக் கொண்ட அல்லது இறந்து போன தொழிலாளரின் குடும்ப உறுப்பினர்கள் தற்போது பெருந்தோட்டங்களில் நிரந்தரமாக வசிப்பது தொடர்பாக உரிய வதிவிடப் பதிவு மற்றும் சேவையில் இருந்து விலகிய / ஓய்வு பெற்ற வருடம் மற்றும் தினம் தெளிவாக உறுதி செய்யப்பட்டு தோட்ட அதிகாரியினால் வழங்கப்பட்ட கடிதம்.

- பெருந்தோட்ட சேவையில் 2005 இலிருந்து அல்லது அதற்குப் பின் வருடங்களில் ஓய்வு பெற்றுள்ள /பெருந்தோட்ட சேவையிலிருந்து விலகிய சேவையாளர்கள் தாம் கடந்த ஐந்து (05) வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான காலம் தொடர்ச்சியாக சேவையாற்றியமை குறித்து ஓய்வு பெற்ற /தோட்ட சேவையிலிருந்து விலகிய வருடம், திகதி என்பன தெளிவாக குறிப்பிட்டு தோட்ட அதிகாரியினால் வழங்கப்பட்ட கடிதம்.

- ஊழியர் நலன்புரி நிதியத்திற்கு பணம் அறவிடுவதாக பதிவு இலக்கத்துடன் உறுதிசெய்யக் கூடிய கடிதம்.

6.3.4 விண்ணப்பதாரி கற்கையின் பின்னர் பெருந்தோட்டப்பகுதி பாடசாலைகளில் தொடர்ச்சியாக பத்து (10) வருடங்கள் சேவையாற்றுதற்கு சம்மதிப்பதாக சத்திய பிரமாணத்தை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

**கவனத்திற் கொள்க :**

சிங்கள மொழிமூலம் கல்வி கற்கும் இந்திய வம்சாவளி விண்ணப்பதாரர்கள் இருப்பின் இந்திய வம்சாவளிக்குரிய விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற்கொள்ளப்படும். அத்துடன் தமிழ் மொழிமூலம் கல்வி கற்கும் சிங்கள விண்ணப்பதாரர்கள் சிங்கள மொழிமூல விகிதாசாரத்திற்கு அமைய கருத்திற்கொள்ளப்படும்.

**7.0 தேர்ந்தெடுப்பதற்கான ஏனைய விடயங்கள்**

7.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் உரிய பாடநெறிக்கான தகைமைகளை உறுதிசெய்வதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சிகள் மற்றும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சை நடைபெறும் தினத்தில் சமர்ப்பிக்க தயாராக இருக்கவேண்டும். அந்தந்த மாவட்டத்தில்/ பிரதேச செயலாளர் பிரிவில் வெற்றிட எண்ணிக்கையை விட மூன்று மடங்கு எண்ணிக்கை நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும். உரிய தினத்தில் முறையான அறிவித்தல் எதுவுமின்றிச் சமுகமளிக்காவிடின் அந்தந்த மாவட்டத்தில்/ பிரதேச செயலாளர் பிரிவில் அவ்வெற்றிடத்திற்கு அந்தந்த மாவட்டத்தில்/ அதற்கமைவான பிரதேச செயலாளர் பிரிவில் தகைமை தொடரொழுங்கில் வேறு விண்ணப்பதாரிகள் அழைக்கப்படுவதுடன் சமுகமளிக்காதோர் தொடர்பாக மீண்டும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

7.2 அனைத்து சான்றிதழ்களுக்கும் மூலப்பிரதிகள் நேர்முகப்பரீட்சைத் தினத்தில் சமர்ப்பிப்பது கட்டாயமாவதுடன் அத்தினத்தில் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படமாட்டார்கள்.

7.3 பாடநெறி மூலம் எதிர்பார்க்கப்பட்ட ஏற்புடைய மட்டத்தை அடைந்து ஆசிரிய தொழிலுக்குள் நுழைய விண்ணப்பதாரிகளிடம் இருக்க வேண்டிய உடல் மற்றும் உள தகவுத்திறன், கல்வி அமைச்சினால் வழங்கப்படும் நியதிகள் அடிப்படையில் முதலாவது நேர்முகப்பரீட்சையின் போது உரிய நேர்முகப்பரீட்சைச் சபையினால் பரிசீலிக்கப்படும். அதன் போது பாடநெறியை தொடருவதற்கு மற்றும் ஆசிரிய தொழிலுக்குள் நுழைவதற்கு விண்ணப்பதாரியின் உடல், உள தகவுத்திறன் போதுமானது என்பது தொடர்பாக அவரின் பெயர் விதப்புரையில் முன்வைக்கப்படும்.

